~~33~~ 107

107

உலோக மருந்துகளும் ரச உபரச மருந்துகளும்.

எழுதப்பட்டது :எம்.ஜி.சம்பந்தம்.

ஆட்டவணை.

சூட்டிருமலுக்கு
பீனிசம், சகல வியாதிக்கும் து ரமாகாகவட்கும்
க்ஷயத்திற்குப் புகை, குன்மத்திற்கும்
செம்பு சுத்தி நாக வெள்ளி இரசக் கட்டு
செம்பு சுத்தி, வெள்ளி வேலை நாகக் கட்டு
துருசுச் சுண்ணம் வாலை ரசமணி, நாகக் கட்டு
சகல வியாதிகட்கும் வழலை மெழுகு
துருசுச் சுண்ணம் மெழுகு சாரக் கட்டு, தாமிரச் சுத்தி
கெந்தக மெழுகு லிங்கக் களங்கம் இரச பற்பம்
தாமிர பற்பம்
அஞ்சனம், கல்லுப்புக் கட்டு பூநீர் தைலம்
முப்புச் சுண்ணம்
இரசச் சுத்தி, கெந்தக மெழுகு ஒதண்ட வாய்வுக்கு
தாமிர சுத்தி
துரிசுச் சுண்ணம் செம்பு சுத்தி கெந்தகத் தைலம்
தாமிர பற்பம்,லிங்கக் கட்டு, வீரமெழுகு முப்புச்சுண்ணம்
நவாச்சாரக் கட்டு துரிசு வெள்ளி
தாளகச் சுண்ணம் லிங்கக் கட்டு இரசக் கட்டு
நாகக் கட்டு
கல்லுப்புக் கட்டு கல்லுப்புச் செந்தூரம் தாமிரச்சுண்ணம்
தாளகச் சுத்தி, முப்பு மார்க்கம், மேகம் 21-க்கும்
கற்றாழை எண்ணெய்
கருவங்கச் செந்தூரம் சாரக் களங்கம்
விஷபாகம் பாண்டு சோகை காமாலை யிவைகட்கு
நாகச் செந்தூரம் வெடியுப்புச் சுண்ணம் முப்புச் சுண்ணம் உப்புக் கட்டு
மேக பஞ்சாமிர்த எண்ணெய் நாலாமாறல் காய்ச்சலுக்கு காமாலை சோகைக்கும்
வெள்ளி வேலை, தாளகக் கட்டு தங்க ரேக்கு வேலை
இரசக் கட்டு கந்தகக் கட்டு அதிதாரக் கட்டு, லிங்கச் சுத்தி
மாந்தத்திற்கும் வரரிஷிமகான அருளிய நயனரோகம்

குணவாகடம்.

கபித்த வில்வாதி லேகியம் (ஆசிரியம்)
பாலசஞ்சீவி மெழுகு
பரணி மருந்து
வனமூலிகா பிராண பூபதி மாத்திரை
சுரம்நான்கு நாழிகையில் விட மாத்திரை
சுரம் ஏழு நாழிகையில் விட மாத்திரை
பஞ்ச கௌவிய கிரதம்
மதன காமேசுர லேகியம்
திருவ ஊயடைத்தான் குளிகை
இராஜ ராஜாதி ரசாயனம்
அசானியாதி குளிகை மகா ஏலாதிச் சூரணம்
க்ஷயரோகத்திற்கு நெய்
தாளிசப்பத்திரி வடகம்
போசன சஞ்சீவி (ஆனந்தக் களிப்பு)
வயிற்க் கடுப்புக்குப் பொடி (ஆசிரியம்)

சாதிலிங்கக்குழம்பு (ஆசிரியம்)

பித்தத்திற்குச் சூரணம் வாதம் 80-க்கும்

சன்னிகள் 13-க்கும் எண்ணெய் சுரால்கிசம்

வல்லாரை கிருதம் மகா வில்வாதி லேகியம்

அஷ்ட குன்மம் முதலானதற்கு மருந்து தம்பெண்ணெய்

சிங்கிப் பற்பம்

கணை யெண்ணெய் குழந்தைகளுக்கு மாந்த எண்ணெய்

வரிக்குமட்டி எண்ணெய்

காளமேக நாராயண செந்தூரம்

பூரணாதி லேகியம்

பூரணாதி லேகியம்

விரோசனக் குளிகை

கதலி கிருதம் (ஆசிரியம்)

புனல் முருங்கை கிருதம் (ஆசிரியம்)

பிரமி கிருதம்

பறங்கிப் பட்டை ரசாயனம் லோக செந்தூரம்

சண்முக செந்தூரம்

வாதத்துக்குக் குடாதி எண்ணெய்

சொறிக்கு மருந்து படர் தாமரைக்கு மருந்து (ஆசிரியம்)

****

சு.ச. 31.1.63.

30.1.63.

உலோக மருந்துகளும் ரச உபரச மருந்துகளும்.

எழுதப்பட்டது: எம். [illegible]. சம்பந்தம்.

சூட்டு இருமலுக்கு மருந்து:-

பசு மாட்டு நெய் படி கால், முருங்கையிலைச் சார் படி அரைக்கால், பனை வெல்லம் பலம் ஒன்று, போட்டுக் காய்ச்சி தைல மிறக்கி சிறு கரண்டி அளவு சாப்பிடவும். ஐந்து நாள் பத்து நேரம்.

பீனிசத்துக்கு மருந்து:-

தாளகம் விராகனிடை.1, யெருக்கம் வேர் பட்டை சரி எடை எழச் சார் விட்டரைத்து துணியில் தடவி காய வைத்து திரி பொருத்தி நாசியில் புகை பிடிக்கவும். பத்து நேரத்தில் தீரும்.

வயித்திய மெழுகு:-

சுக்கு, மிளகு, திப்பிலி, சரியிடை வறுத்து பொடி செய்து முலைப்பால் தேன் கூட்டி லேகியம் வில்லை செய்து பிஞ்சு சுண்டைக்காய் பிரமாணம் சாப்பிடவும். பத்து நாளையில் மேகம் தீரும். சகல வியாதியும் தீரும்.

தூரம் ஆகாதவர்களுக்கு:-

தூரம் ஆகாத பெண்களுக்கு கொள்ளை வேக வைத்து அந்த தண்ணீரில் பெருங்காயம் விராகனிடை ஒன்று அரைத்து குழப்பி கொடுக்கவும். மூன்று நாளைக்கு ஆறு வேளை பேதியாம்.

க்ஷயத்துக்குப் புகை:-

தாளகம் விராகனிடை.1, வசம்பு விராகனிடை.1, அரப்பு, முருக்கிலைச் சார் கையாந்தகரை சார், பழச் சார் இவைகளை விட்டு அரைத்து துணியில் தடவி காய வைத்து சுங்கானில் வைத்து மூன்று நாள் சாப்பிட்டு முழுங்கவும்.

உன்மத்திற்கு:-

கெந்தகம் பலம் ஒன்றை, வேளைச் சார் விட்டு மூன்று நாள் அரைத்து மண் குகையில் வைத்து தாம்பிரத் தகடு தட்டி கருஞ் சுவைப் பழத்தில் எட்டு நாள் ஊற வைத்து, சீனிக்காரம் தடவி குகையில் வைத்து நாலு சீலை மண் செய்து கெஜபுடம் போட பற்பம். பற்பமும், லிங்கமும் சரியிடை சேர்த்து எருக்கம் பால் விட்டரைத்து வில்லை செய்து காய வைத்து கெஜபுடம் போட செந்தூரம். திரிகடுகு, சூரணம், தேன், பற்பம் பணவிடை கொடுக்கத் தீரும். பால், நெய், சிறு பயிர், உப்பு, புளி தள் படி.

செம்பு சுத்தி:-

தாளகம் பலம்.1, லிங்கம் பலம்.1, ரசம் பலம்.1, கெந்தகம் பலம்.1, துருசு பலம்.1, வழலை பலம்.5, பழச் சார் விட்டு 12 சாமம் அரைத்து வில்லை செய்து நன்றாய்க் காய வைத்து அதில் சீலை மண் சட்டியில் செய்து மணல் நடுவே அதை மேல் மணலிட்டு சட்டி மூடி இரண்டு சாமம் கமலாக்கினி மணல் கருகிலல் ஆற விட்டு எடுக்கவும். செம்பில் அரிசியிடை கோலால் கிண்டி கல்லில் விடவும். தங்கம் சரியிடை வெள்ளி பத்துக் கொண்டு வயசு.

நாக வெள்ளி:-

நாகம் பலம்.3, தேசி அமரியில் வாழைப் பூவில் சுத்தி செய்து தேசி அமரியில் ஐந்து நேரம் சாய்க்கவும், கட்டும் செம்பு ஆறு, நாகம் நாலு உருக்க வெள்ளி வயசு எட்டு

இரசக் கட்டு:-

ரசம் பலம்.1, அமுரி படி.1, பூநீறு படி.1, கரைத்து ஆறு நாழிகை வைத்து

தெளிவாயிருந்து ஒட்டில் ரசம் விட்டு மூன்று சாமம் சுருக்கு கட்டும் வெள்ளி யேழு, செம்பு மூன்று, குரு ஒன்று, வயசு எட்டு.

செம்பு சுத்தி:-

வங்கம் பலம் ஒன்று, தாளகம் பலம் ஒன்று, வழலை பலம் ஒன்று மனோசிலை பலம் ஒன்று, துருசு பலம் ஒன்று, பழச்சார் விட்டு நாலு சாமம் அரைத்து வில்லை செய்து காய வைத்து அகில் சீலை மண் மணல் புடம் கட்டும் செம்பில் சரியிடை உருக்கி கொடுத்து கோலால் கிண்டி கல்லில் விடவும். வெள்ளியில் பத்துக் கொன்று வயசு பதினாறு.

செம்பு சுத்தி:-

கெவுரி பலம் ஒன்று, ரசம் பலம் ஒன்று, தாளகம் பலம் ஒன்று, லிங்கம் பலம் ஒன்று வழலை பலம் ஒன்று, பழச் சார் விட்டு அரைத்து வில்லை செய்து காய வைத்து சட்டியில் வில்லையை வயித்து மேலே செம்பு சின்னம் வைத்து மேலே மணல் மூடி கூடி முடி கமலாக்கினை சாமரெண்டு மணல் கருகினல் ஆற விட்டு எடுத்து செம்பு விராகனிடை ஒன்று குருவு விராகனிடை ஒன்று உருக்கி கல்லில் விடவும். வெள்ளி ஏழு. இந்த செம்பு மூன்று நீ தரம் உருக்கி தங்கம் ஒன்று சேர்த்துக்க வயசு பத்து.

வெள்ளி வேலைக்கு:-

வெள்வங்கம் பலம் ஒன்று, ரசம் பலம் ஒன்று, பாஷாணம் பலம் இரண்டு வழலை பலம் நான்கு பழச் சார் விட்டு மெழுகு பதமாய் அரைத்து வில்லை செய்து காய வைத்து மணல் புடம் கட்டும் செம்பில் பத்துக்கு ஒன்று வெள்ளி ஒன்று வயசு பத்து.

நாகக் கட்டு:-

நாகம் பலம்.1, பழச் சாற்றில் ஐந்து தரம் உருக்கிச் ~~சேர்~~ சாய்க்கவும் கட்டும். தங்கம், நாகம் சரியிடை சேர்த்து வெள்ளி செம்பில் பத்துக் கொன்று வயசு, ஏழு.

துருசு சுன்னம்:-

துருசு பலம்.1, வழலை பலம்.1, பழச் சாறு விட்டு நன்று அரைத்து வில்லை செய்து காய வைத்து அகில் புடம் கோழிப்புடம் மறுபடி அரைத்து வில்லையை காயவைத்து கோழிப்புடம் செய்து ரசமணி விராகனிடை மேலே தூவ சுன்னம்.

வாலை ரசமணி:-

வால் ரசம், தாம்பிரக் கிண்ணியில் விட்டு துருசு சுன்னம் மேலே தூவி ரச சுன்னம் பண்ணி உருண்டை செய்து வழலை பலம்.1, பழச் சார் விட்டு அரைத்து கவசம் கட்டி காய வைத்து விளக்கில் வாட்டவும். கட்டும் தங்கம் சரியிடை வெள்ளி பத்துக் கொன்று வயசு எட்டு.

நாக கட்டு:-

வழலை பலம்.1, கருவங்கம் பலம்.1, வெடியுப்பு பலம்.1, வெங்காரம் பலம்.1, பழச் சார் விட்டு அரைத்து நாகத்துக்கு பலம் 1-க்கு கவசம் கட்டி ஏழு சீலை சுத்தி ஒரு எருவு புடம் கட்டும். வெள்ளி ஏழு, செம்பு, மூன்று, குருவு ஒன்று, தங்கத்தில் சரியிடை கொடுத்து கொடுக்கவும் வயசு ஏழு.

சகல வியாதிகளுக்கும் மெழுகு:-

வழலை பலம்.1, சூடன் பலம்.1, வெங்காரம் பலம்.1, செயநீர் விட்டு இரண்டு சாமம் அரைத்து மெழுகு செய்து தேனில் விராகனிடை ஒன்று, பத்து வேளை சாப்பிடவும். பத்தியமில்லை.

துருசு சுன்னம்:-

வழலை விராகனிடை.1, வீரம் விராகனிடை.1, பூரம் விராகனிடை.1, புனுகு விராகனிடை.1, வெள்ளைக் கருவு வசம் கட்டி நிழலிலுலர்த்தி சீலை மண் காய வைத்து

கோழிபுடம். சுன்னம் விராகனிடை.1, ரசம் விராகனிடை.1, மத்திச்சு பணவிடை ஊமத்தங் காயிக்குள் வைத்து சீலை மண் புடம் கோழி கட்டும்.

<u>ஆறுத புண்களுக்கு மருந்து</u>:-

ஆறுத புண்களுக்கு சுடுகாட்டில் வெந்த எலும்பு விராகனிடை.5, துருசு விராகனிடை. 1, நன்றாய் பொடி பண்ணி பசு வெண்ணை போட்டு அறைத்து புண்ணுக்கு போடவும் தீரும்.

<u>மெழுகு சாரக் கட்டு</u>:-

பச்சைப் பூ நீர் பலம்.1, பச்சைச் சாரம் பலம்.1, இரண்டையும் நன்றாய் அரைத்து சாரத்துக்கு தடவி குகையில் வைத்து ஏழு சீலை சுத்தி எருவு ஒன்று இந்தப் பிர காரம் புடம் ஐந்து செய்யவும். பிறகு குகையில் வைத்து மூன்று சீலை மண் எருவு இரண்டு நாகத்தில் பத்துக் கொன்று தங்கம் சேர்த்து ஏழு மூன்று பத்துக் கொன்று வயசு ஏழு.

<u>தாம்பிர சுத்தி</u>:-

தாம்பிரத் தகடு தட்டி புளியிலை வழலைப் பொட்டு அரைத்து கவசம் கட்டி கத்தாழை மடலுக்குள் வைத்து சீலை மண் செய்து முழுபுடம் செய்ய சுத்தி.

<u>கெந்தக மெழுகு</u>:-

வழலை பலம்.1, கெந்தகம் பலம்.1, தாளகம் பலம்.1, பழச்சார் விட்டு நன்றாய் அரைத்து வில்லை செய்து காய வைத்து மணல் புடம் போட கட்டும். வெள்ளி செம்பில் பத்துக் கொன்று வயசு எட்டு.

<u>லிங்க களங்கம்</u>:-

வழலை பலம்.1, சூடன் பலம்.1, பழச் சார் விட்டு அரைத்து வில்லை செய்து காய வைத்து அதில் சீலை மண் செய்து கோழிப்புடம் கட்டும். கட்டின உப்பு பலம்.1, லிங்கம் பலம்.1, தங்கம் விராகனிடை.1, உமிநீர் விட்டு அரைத்து வில்லை செய்து காய வைத்து அகில் புடம் கோழி செம்பு பத்துக் கொன்று வயசு எட்டு.

<u>இரச பற்பம்</u>:-

கெந்தகம் பலம்.10 வெள்ளை உள்ளி சரியிடை சேர்த்து அரைத்து பூப்புடம் போட்டு தயிலமிறக்கி ரசம் சுத்தி செய்து தயிலம் விட்டு அரைத்து ரவியில் வைக்க பற்பம். மறுபடி அரைத்து வில்லை செய்து காயவைத்து புடம் கோழி. சீனி சர்க்கரையில் பணவிடை பற்பம் சாப்பிடவும். கிறந்தி, அறையாப்பு சூலை தீரும். உப்பு, புளி தள்ளுபடி.

<u>தாம்பிர பற்பம்</u>:-

துருசு விராகனெடை.1, துத்தம் விரகனிடை.1, சீனம் விராகனிடை.1, தாளக பற்பம் விராகனிடை.1 முலைப்பால்விட்டு நன்றாய் அரைத்து பழய தட்டுக்கு கவசம் கட்டி ஓட்டில் வைத்து சீலை மண் செய்து கெஜபுடம் போட பற்பம்.

<u>அஞ்சனம்</u>:-

உப்பு வருத்து கரியாக்கி பழச் சார் விட்டு குழப்பி நெற்றியில் திலதம் போட்டுப் போக ராஜவசியம் வியாதியஸ்தர்களை கண்ணால் பார்த்தால் சகல வியாதிகளும் பறக்கும்.

<u>கல்லுப்பு கட்டு</u>:-

வெடியுப்பு பலம்.10, கல்லுப்பு பலம்.5, சீனம் பலம்.3, சாரம் பலம்.2 பழச்சார் விட்டு அரைத்து உருண்டை பண்ணி காய வைத்து வழலை பலம்2-க்கு பழச்சார் விட்டு அரைத்து கவசம் கட்டி ரவியில் உவர் மண் வைத்து மேலே சீலை மண் செய்து கெஜபுடம் போடக் கட்டி மணியாகும். குன்மத்துக்கு தேனில் விராகனிடை கால் கொடுக்க வும்.

<u>பூநீர் தயிலம்</u>:-

பூநீர் பலம்.50, நாதம் பலம்.2 சட்டியில் போட்டு அம்ரி விட்டுப் பிசைந்து

காயவைத்து குழித் தயிலம் அந்த தயிலத்தை பரணியில் அடக்கம் செய்யவும். ஒரு பணவிடை தயிலம் கையில் விட்டு ஒரு பணவிடை குருவும் போட்டு குமப்பிச் சாப்பிடவும். காயசுத்தி. காயம் அழிவு இல்லை.

முப்புச் சுன்னம்:-

வழலை பலம்.10, வெங்காரம் பலம்.5 1/8, சாரம் விராகனிடை.5 1/8 பழச் சார் விட்டு நன்றாய் அரைத்து வில்லை செய்து காய வைத்து அகலில் புடம் எருவு பத்து. பற்பம் விராகனிடை 2, வீரம் விராகனிடை1, புரம் விராகனிடை.1 இவைகளை நீ உமிநீர் விட்டு அரைத்து நன்றாய் கவசம் கட்டி காய வைத்து ஒரு சீலை மண்ணுள் குருவி புடம் போட சுன்னம்.

அந்த சுன்னம் விராகனிடை.2, காரசாரச் சுன்னம் விராகனிடை.2 இவைகளை உமிநீர் விட்டு அரைத்து தாளகத்துக்கு கவசம் கட்டி காய வைத்து ஒரு சீலை மண் மணல் புடம் கட்டும் வெள்ளி நாலுக்கு ஒன்று குருவம் பத்துக் கொன்று செம்பில் தங்கம் ஒன்று வயசு பத்து.

இரச சுத்தி:-

இரசத்தை கல்வத்தில் விட்டு சாதமும் கூடப் போட்டு நன்றாய் அரைத்து துணியில் வடிகட்டி எடுத்துக் கொள்ளவும்.

கெந்தக மெழுகு:- ✓

கெந்தகம் வேண்டியது வாங்கி சுத்தி செய்து அறைக்கும் வகை: சங்கம் பழச் சார் விட்டு ஒரு சாமமும் கையாந்த கரைச் சார் விட்டு ஒரு சாமமும் வெள்ளெருக்கம் சார் விட்டு ஒரு சாமமும் வெள்ளெருக்கம் சார் விட்டு ஒரு சாமமும் சிவனார் வேம்புத் தயிலத்தில் ஒரு சாமமும் விட்டு அரைத்தால் மெழுகு ஆகும். அந்த மெழுகு கிரந்தி பறங்கிப் புண்ணு, குலை, சொறி, சிரங்கு, கடிவிஷம் முதலிய வியாதிகளை கண்டிக்கும். அந்த மெழுகை ஓங்கையில் வைத்து சீலை மண் செய்து கெஜபுடம் போடச் சுன்னம். தாம்பிரத்தில் பத்துக் கொன்று வயசு எட்டு.

ஒதண்ட வாயுவுக்கு:- ✓

நாயுருவியிலையை சட்டியில் போட்டு சிறுநீர் விட்டு ஒட்ட கலத்தி வுதித்துப் போட்டு வதக்கிக் கட்டவும் மூன்று நேரத்தில் தீரும்.

தாம்பிர சுத்தி:-

நாலாய் துண்டு செய்த சேருங் கொட்டையை குழி தயிலமிறக்கி அதில் தாம்பிரத்தை உருக்கி ஏழு தரம் சாய்க்கவும். சுத்தி நன்றாயிருக்கும்.

துருசு சுன்னம்:-

முப்பு வலம்.1, வெடியுப்பு பலம்.1, சீனம் பலம் .1 பழச்சார் விட்டு அரைத்து வில்லை செய்து காய்வைத்து அகலிட்டு கோழிப் புடம் போடச் சுன்னம். அந்தச் சுன்னம் விராகனிடை .1, வீரம் விராகனிடை.1, பூரம் விராகனிடை.1, உமிநீர் விட்டு அரைத்து சீலை மண் செய்து இரண்டு எருவில் ஒரு புடம் போட சுன்னம். அந்தச் சுன்னம் விராகனிடை 1 முன் சொல்லிய வெடியுப்பு சுன்னம் விராகனிடை1, உமிநீர் விட்டு அரைத்து தாளகத்துக்கு கவசம் கட்டி காய வைத்து சீலை மண் செய்து மணல் புடம் போடக் கட்டும். வெள்ளி நாலு குருவும் ஒன்று கொடுத்து செம்புக் கொன்று வயசு பத்து துரிசுக்கும் முன் மாதிரி எடுத்து கவசம் செய்து புடம் முன் போல் போடவும்.

செம்பு சுத்தி:-

கெவுரி பலம்.1, மனோசிலை பலம்.1, ரசம் பலம்1. நாகம் பலம்.1, வழலை பலம்.1 இவைகளைப் பழச் சார் விட்டு நன்று அரைத்து வில்லை செய்து காயவைத்து சட்டியில் வைத்து செம்புக் கிண்ணம் மூடி மேலே மண் தெரியாமல் போட்டு சட்டியை மூடி எரிக்கவும். கமலாக்கினி மனல் கருகிலல் எரிப்பை நிறுத்தி ஆற விட்டு எடுக்கக்

கட்டும் செம்பு ஒன்றும் குருவாம் ஒன்றும் உருக்கி கல்லில் விடவும். வெள்ளி ஏழு, இந்தச் செம்பு மூன்று, தங்கம் ஒன்று வயசு பத்து.

கெந்தகத் தயிலம்:-

பூநீர் பலம்.8, நாதம் பலம்.2, இவை இரண்டையும் சிறுநீர் விட்டுப் பிசரி காயவைத்து கெந்தகம் சுத்தி செய்து குமரிப் பால் பலம்.10, கூட சேர்த்த தயிலமாகும் இதில் ரசம் மெழுகாகும்.

தாம்பிர பற்பம்:- ✓

தாம்பிர அரப்பொடி பலம் ஒன்றை எலுமிச்சம் பழச் சாற்றில் சுத்தி செய்து அதற்கு சரியிடை உப்பு சேர்த்து பழச்சார் விட்டு அரைத்து வில்லை செய்து காயவைத்து பத்து எருவில் புடம் போட பற்பமாகும். இதைத் தேனில் பணவிடை கொடுக்க மேகம் இருபத்தொன்றும் தீரும்.

லிங்கக் கட்டு:-

லிங்கம் பலம்.1, ஊமத்தங்காயை தேங்காய் பிரமாணம் அரைத்து அதற்குள்ளே மேற்கண்ட லிங்கத்தை வைத்து சீலை மண் பலமாய் செய்து முழுபுடம் போடக் கட்டிப் போம். செம்பு மூன்று, வெள்ளி ஏழு, குரு ஒன்று வயசு எட்டு.

வீர மெழுகு:-

வீரம் பலம்.1, நவாச்சாரம் கால் கழஞ்சு பொடி செய்து கும்பிடு கிளிஞ்சி சதை பலம்.2 முட்டை மஞ்சக் கரு வில் பிசரி அண்டக் குகையில் பாதி வைத்து நடுவே லிங்கம் விராகனிடை கழஞ்சு வைத்து மேலே பாதி வைத்து மேலே முட்டைக் கழுத்துக்கு மூன்று சீலை மண் செய்து சட்டியில் மணல் ஒரு படிக்குப் போட்டு நடுவே குகை வைத்து சட்டியை மூடி ஆவ்ரம் விறகை பத்து நாழிகை எரிக்க கமலாக்கினி மெழுகு ஆகும். வெள்ளி பத்துக்கொன்று வயசு எட்டு.

முப்புச் சுன்னம்:-

முப்பு விராகனிடை.2, உப்புக் கட்டு விராகனிடை.2, சீனிக்காரம் விராகனிடை.1 இவைகளை எலுமிச்சம் பழச் சார் விட்டு நான்கு நாளிகை அரைத்து பதத்தில் எடுத்து வில்லை தட்டி ஒரு நாள் காய வைத்து மறுநாள் இருபது நாழிகை வரைக்கும் காய வைத்து ரவியில் காயவைத்து அந்த வில்லையை எடுத்து அகலில் வைத்து அதன் மேல் வில்லையை வைத்து அகலால் மூடி அந்த வாயுக்குக் களிமண் சுத்தி தடவி இரண்டு துணி சீலைமண் செய்து சற்று ரவியில் வைத்து இருபது வரட்டியில் முழுபுடம் போட சுன்னமாகும்.

நவச்சாரக் கட்டு:-

சீனிக்காரம் பலம்.½, உப்பு பலம்.1, நவாச்சாரம் பலம்.½, செயநீர் விட்டு அரைத்து வில்லை செய்து காய வைத்து அகலுக்குள் வைத்து இரண்டு சீலை மண் செய்து கோழி புடம் போடச் சுன்னமாகும். அந்தச் சுன்னத்தை அவுரிச் சார் விட்டு அரைத்து வில்லை செய்து காய வைத்து அகலுக்குள் வைத்து சீலை மண் செய்து கோழிப்புடம் போடச் சுன்னமாகும். மறுபடியும் அந்தச் சாறை விட்டு அரைத்து வில்லை செய்து சுத்தி வரட்டி அடுக்கி கோழிப்புடம் போடச் சுன்னமாகும்.

திருசு வெள்ளி:-

திருசு பலம் ஒன்றை, கோவைச் சாற்றில் நாலு நாளைக்கு ரவியில் சுருக்கவும். வெளுக்கும். மனோசிலை பலம் ஒன்றை மான செவிக் கள்ளிச் சார் விட்டு நன்கு அரைத்து நாகத்துக்கு அப்பி செம்மண் சீலை மூன்று செய்து கொக்குப் புடத்தில் போடவும் தவள நிறமாய் நீரும், நாகபற்பம் யெட்டுக்கொன்று வெள்ளியில் கொடுக்கவும். வயசு எட்டு.

தாளக சுன்னம்:-

தாளகம் பலம் ஒன்றை சுண்ணாம்பில் ஏழு தரம் சுத்தி செய்து கும்பிடு கிளிஞ்சி

பொத்த அதில் சூடம் விராகனிடை.1, வெங்காரம் விராகனிடை1 போட்டு பொறித்து வாயில் போட்டு செயநீரெடுத்த பாரையுப்பு பலம் இரண்டு அரைத்து தாளகத்துக்கு கவசம் கட்டி மூன்று சீலை மண் செய்து கோழி புடம் போடச் சுன்னமாகும். தாம்பிரம் பத்துக் கொன்று வயசு ஒன்பது.

லிங்கக் கட்டு:-

லிங்கம் பலம் ஒன்று, எட்டிக் கொட்டையை கையாந்த கரை சாற்றை விட்டு அரைத்து லிங்கத்துக்கு கவசம் கட்டி சீலை மண் மூன்று செய்து கோழி புடம் போடக் கட்டும். வெள்ளியேழு, செம்பு மூன்று குரு ஒன்று தங்கம் ஒன்று.

இரசக் கட்டு:-

இரசம் பலம் ஒன்று, அமரி படி ஒன்று, பூநீர் படி ஒன்று; இவைகளை கரைத்து அறுபது நாழிகை வைத்திருந்து தெளிவாயிருந்த சிட்டில் இரசம் விட்டு மூன்று சாமம் சுருக்கக் கட்டும். வெள்ளி ஏழு, செம்பு மூன்று, குரு ஒன்று வயசு எட்டு.

நாகக் கட்டு:-

விளிம்பி வேர் பட்டை விராகனிடை15, தாளகம் விராகனிடை5 இவை இரண்டையும் சேர்த்து வஸ்த்து விட்டு அரைத்து நாகத்துக்கு கவசம் கட்டி சீலை மண் செய்து கோழி புடம் போடவும். இந்தப் பிரகாரம் ஐந்து புடம் போட கட்டும். வெள்ளி யேழு செம்பு மூன்று, குரு ஒன்று, வயசு ஏழு கல்லுப்பு கால்படியை பிரண்டைச் சாற்றில் போட்டு ஊர்த்தி சுக்கான் பொடி சமனாய் சேர்த்து மாவிலைக் கொழுந்து கொஞ்சம் சேர்த்து நன்றாய் அரைத்து சல்லிக்கு கவசம் கட்டி முழுபுடம் போட வெட்டை ஒன்று, வெள்ளி இரண்டு, தங்கம் ஒன்று வயசு ஏழு.

கல்லுப்புக் கட்டு:-

கல்லுப்பு பலம் ஒன்று, உப்பு விராகனிடை ஒன்று இவை இரண்டையும் கல்வத்தில் போட்டு முசுமுசுக்கைச் சார் விட்டு மூன்று சாமம் அரைத்து வில்லை செய்து ரவியில் வைத்து சில்லிட்டு சீலை மண் செய்து மூன்று எருவில் புடம் போட கட்டும். மாத்தை ஐந்து.

கல்லுப்புச் செந்தூரம்:-

உப்பு பலம் ஒன்று, முப்பு விராகனிடை ஒன்று இவை இரண்டையும் கல்வத்தில் போட்டு முத்தி மடலகத்தாளையின் அடி பாகத்தில் ஒரு சாண் நீளம் நருக்கி தட்டிச் சார் பிழிந்து இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்து ரவியில் வைத்து சில்லிட்டுச் சீலை மண் செய்து பதினைந்து எருவில் புடம் போடவும். வயசு ஆறு.

தாம்பிரச் சுன்னம்:-

தாம்பிரத் தகடு, சீறு செங்கழனிச் சாற்றிலே நெல்லிக்காய்க் கெந்தகத்தை அரைத்து குழம்பாக்கி அதில் ஏழு தரம் தாம்பிரத் தகட்டை காய்ச்சித் தோய்த்து எடுத்து அதில் ஐந்தாங்காச்சல் வெடியுப்பும் சீனக்காரம் நாபி இவை மூன்றையும் காட்டாமணக்குப் பால் விட்டு அரைத்து கவசம் கட்டிக் குகையில் வெங்காரத்தை காட்டாமணக்கு பால் விட்டு அரைத்து குகையில் தடவி வில்லையை வைத்து மேலேயும் தடவி சில்லிட்டு சீலைமண் செய்து கெஜபுடம் போட சுன்னமாகும். செம்பில் பத்துக் கொன்று வயசு பூரணம்.

தாளகசுத்தி:-

நாதநீர் கால் படியை சட்டியில் போட்டு அதின் மேல் தாளகத்தை டோலயம் கட்டி அதன் வைத்து அதன் மேல் நாதநீர் கால்படியும், தண்ணீர் அரைப்படியும் விட்டு காய்ச்சிக் கொதித்தவுடனே நீல நிறங் கொடுக்கும். அப்பொழுது தண்ணீர் விட்டு அலம்பி சிறிது நேரம் வெய்யிலில் வைத்து எடுத்துக் கொள்ளவும். நல்ல சுத்தி.

~~முப்பு மார்க்கம்~~.

உப்பு மார்க்கம்:-

கோளான பூநீர் பங்குனி, சித்திரை மாதங்களில் மண்படா தெடுத்து வந்த நாலுபடி பாண்டத்திட்டு கடலுப்பு படி இரண்டும் கல் சுண்ணம் படி இரண்டும் அமரி படி எட்டும் போட்டுக் கிண்டி செயநீர் எடுத்து வைக்கவும். மூன்று நாள் வைத்துக் கிளரி தெளிவாயிருந்தமபடி அந்தத் தெளிவை இருத்துக் காய்ச்சிக் காய வைத்து பழச்சார் விட்டு அரைத்து வில்லை செய்து காயவைத்து எடுத்துக் கொள்ளவும். செயநீரை எடுத்து வைக்கவும். சகல சரக்குகளையும் கட்டும். செம்பு சுத்தியாகும்.

மேகம் இருபத்தொன்றுக்கும் கத்தாளை எண்ணெய்:-

கத்தாளஞ் சார் படி ஒன்று பசுவின் பால் படி ஒன்று, சிறுநாகப்பூ பலம் ஒன்று, வெந்தயம் பலம் ஒன்று, சாதிக்காய் விராகனிடை இரண்டு சிராம்பு விராகனிடை இரண்டு, ஏலம் விராகனிடை இரண்டு. இது வெல்லாம் பசுவின் பால் விட்டரைத்து மெழுகு பதமாய்க் கடுகு சசிதமாயும் எடுத்துக் கொண்டு தினமும் காலை மாலை இரண்டு நேரமும் ஒரு முட்டை உள்ளுக்குக் கொள்ள மேகம் இருபத்தொன்றும், நீர்கட்டு, நீர்கடுப்பு, வெள்ளை விழுகிறது, சதை அடைப்பு இது வெல்லாம் தீரும். பத்தியமில்லை.

விஷபாகம், பாண்டு ரோகம் சோகை, காமாலை இவைகளுக்கு சூரணம்:-

சிட்டம் இடித்த தூள் படி ஒன்று சாரணை வேர்த் தூள் படி ஒன்று, மிளகு இடித்த தூள் படி இரண்டு இவைகளை கலந்து காலை மாலை இரண்டு நேரமும் வேர்கடலை பிரமாணம் கொடுக்கவும். இது சாப்பிட்டால் கரப்பான் பண்டங்கள் உண்ணலாகாது. புளி, புகையிலை ஆகாது. பசுவின் மோரு, பசுவின் பால், பசுவின் நெய், முருங்கைக் காய், புடலங்காய், பீர்க்கங்காய் இவைகள் ஆகும். வியாதி ஆறும் தீரும். கை கண்ட மருந்து.

கருவங்க செந்தூரம் செய்யும் வகை:-

வங்கம் பலம் ஒன்றை தகடாகத் தட்டிப் பொடிப் பொடியாகக் கிள்ளி குத்துப் பாலை யிலையை மை போல் அரைத்து சில்லிட்டு கோழி புடம் போடவும். இது பிரகாரம் நான்கு புடம் போட செந்தூரமாகும். வெள்ளி ஏழு, செம்பு மூன்று, கரு ஒன்று வயசு ஏழு.

சாரக் களங்கம்:-

சாரம் பலம் ஒன்று, வங்கம் பலம் ஒன்று, வெங்காரம் பலம் ஒன்று இவைகளை முருங்கையிலைச் சார் விட்டு மூன்று சாமம் அரைத்து உருண்டை செய்து காயவைத்து குகையில் வைத்து சீலைமண் செய்து பத்து எருவில் புடம் போட மணியாகும். நல்ல செம்பில் பத்துக் கொன்று சாரத்தால் சரக்கெல்லாம் கட்டும். கௌதம்பை சாற்றுல்.

நாகச் செந்தூரம்:-

நாகம் பலம் இரண்டு சுத்தி செய்து இருப்புச் சட்டியில் வைத்து எரிக்கவும். உருகும் போது ஐந்தாங்காய்ச்சல், வெடியுப்பு நாலுக் கொன்று போட்டு சிவந்த நாயுருவியை கத்தையாகக் கட்டி நாலு சாமம் வருக்க செந்தூரமாகும். செம்பில் பத்துக் கொன்று வயசு.

வெடியுப்புச் சுண்ணம்:-

ஒரு சட்டியில் ஆலாம் பழுப்பு இலை எட்டு வைத்து நடுவே ஐந்தாங் காய்ச்சல் வெடியுப்பு பலம் மூன்று வைத்து மேலேயும் பழுப்பு இலை எட்டு வைத்து மேலே கல் வைத்து வரட்டி அடுக்கி புடம் போடச் சுண்ணம்.

உப்புச் சுண்ணம்:-

பூநீர் படி அரை, கல்லுச் சுண்ணம் படி அரை, வெடியுப்பு படி ஒன்று, இவைகளை கீழ் மேல் வைத்து ஒரு சாமம் எரிக்கவும், சுண்ணமாகும். அதை சலத்தில் கரைத்து

மூன்று நாள் அல்லது நான்கு நாள் வைத்து தெளிவாயிருந்து காய்சி வைத்து பத்திரம் பண்ணவும்.

உப்புக் கட்டு:-

உப்புக் கல் படி கால், பீங்கானில் போட்டு சாராயம் விட்டு மூன்று நாள் ரவியில் வைத்துக் காய்ந்த பிறகு கலயத்தில் பச்சை மூலப் புளி போட்டு அதில் உப்பு போட்டு சில்லிட்டு சீலை மண் செய்து கஜபுடம் போடக் கட்டும்.

மேகம் பஞ்சாமிர்த எண்ணெய்:- ✓

ரச கற்பூரம் விராகனிடை நான்கு, நேர்வாளம் ~~சுத்தி செய்த பருப்பு~~ என்பது இவை இரண்டையும் கல்வத்தில் விட்டு ஒரு சாமம் நன்றாய் அரைத்து நாட்டுப் படியில் ஒரு படி விளக்கெண்ணெயும் போட்டு நன்றாய்க் கரண்டி கொண்டு கிண்டி அடுப்பில் வைத்து நன்றாய் நுரை கிளம்ப எரித்து எடுத்துக் கொண்டு ~~எண்~~ எண்ணெயை பக்குவமாய் இறக்கி ஊற்றவும் உள்ளுக்கு கொடுக்கவும். சுக பேதிக்கு இப்படிக் கொடுத்து புளி வைத்த மிளகு நீர் உப்பும் சாதமும் கூட்டிக் கொள்ளவும். மோரும் சேர்த்துக் கொள்ளவும். கிரந்திக்கு மூன்று நாள் சூலைக்கு மூன்று நாள் கொடுக்கவும்.

நாலா முறைக் காச்சலுக்கு:- ✓

பழைய கம்பு கால்படி எடுத்து மூடல் வாங்கி குப்ப மேனிச் சாரு படி கால் விட்டுக் கலந்து மத்திச்சு வைத்து மறுநாள் காலையில் சாப்பிட்டு விடவும். காச்சல் விட்டுப் போகும்.

காமாலை சோகைக்கு மருந்து:- ✓✓

வெள்ளைப் பூண்டு ரூபாயிடை ஒன்று மிளகு ரூபாயிடை ஒன்று, சுக்கு ரூபாயிடை ஒன்று, திப்பிலி ரூபாயிடை ஒன்று, தேசாவரம் ரூபாயிடை ஒன்று, கையாந்த கரை தழை ஒரு பிடி கொண்டு வந்து மேற்கண்ட வகைக்கு மேற்கண்ட தழைச் சாருடனே விட்டுக் கல்வத்தில் போட்டு அரைத்து சுண்டைக்காயளவு உருண்டை செய்து வெய்யிலில் காய வைத்து எடுத்துக் கொண்டு காலையில் இரண்டு உருண்டை வெந்நீரில் அரைத்து சாப்பிடவும். இப்படி மாலையும் சாப்பிடவும். பத்தியமில்லை. இப்படி ஒரு மண்டலம் சாபிட்டு வரவும். மேல் வீக்கத்துக்கு குப்பை மேனியிலை கொண்டு வந்து நன்றாய் அரைத்துக் தடவிக் கொண்டு வர அநுகூலமாகும்.

வெள்ளி வேலை:-

வெள்ளி சரிகை விராகனிடை ஒன்று, இரசம் விராகனிடை ஒன்று இவை இரண்டையும் ஒன்று சேர்த்து வெற்றிலையில் உப்புப் போட்டு கசக்கி சார் விட்டு மெழுகு போலரைத்து சல்லா துணியில் பிழிந்து விடவும். அந்த மெழுகை டப்பியில் போட்டுக் கொள்ளவும். தாம்பிரத்தில் பத்துக் கொன்று கொடுக்கவும். வெள்ளி.

தாளகக் கட்டு:-

தாளகம் பலம் ஒன்று, வழலை பலம் ஒன்று, சூடம் பலம் ஒன்று இவைகளை பழச் சார் விட்டு நன்றாய் அரைத்து தாளகத்துக்கு கவசம் கட்டி காய வைத்து ஏழு சீலை சுத்தி காடை புடம் போடவும் கட்டும். வெள்ளி ஏழு செம்பு மூன்று குரு ஒன்று வயசு பத்து.

தங்க ரேக்கு வேலை:-

தங்கரேக்கு விராகனிடை ஒன்று, இரசம் விராகனிடை ஒன்று இவை இரண்டையும் ஒன்று சேர்த்து வெற்றிலையில் உப்புப் போட்டுக் கசக்கி பிழிந்து அந்த சாரை விட்டு நல்ல மெழுகு பதமா அரைத்து உருண்டை செய்து சல்லாத் துணியில் வைத்து நன்றாய் பிழிந்து விடவும். அந்த மெழுகை டப்பியில் வைத்துக் கொள்ளவும். வெள்ளியில் பத்துக்கொன்று வயசு எட்டு.

<u>இரசக் கட்டு:-</u>

சிறுகாஞ் சூரட்டுடைத் தண்டை கொண்டு வந்து நன்று அரைத்து இரசத்துக்கு கவசம் கட்டி சில்லிட்டுச் சீலை மண் செய்து கறுவாறி புடம் போடவும் கட்டும் வெள்ளி.

<u>கெந்தகக் கட்டு:-</u>

சீனிக்காரம், சூருசு இவை இரண்டையும் சரியிடை வைத்து முயல் காது இலைச் சார் விட்டு அரைத்து கெந்தகத்துக்கு கவசம் கட்டி சீலை மண் செய்து காடை புடம் வைக்கக் கட்டும். வெடியுப்பு, கல் சுண்ணம் இவை இரண்டையும் அரைத்து கெந்தகத்துக்கு கவசம் கட்டி ஓட்டில் கருக வருக்கக் கட்டும் லிங்க செந்தூரம்.

<u>அரிதாரக் கட்டு:-</u>

அரிதாரம் பலமொன்றை மெருகு சாரணை சார் விட்டு மெழுகு பதமாய் அரைத்து பில்லை தட்டிக் காய வைத்து அகலில் வைத்து சீலை மண் செய்து கபுதாரி புடம் - நீரும் வெள்ளியில் பத்துக் கொன்று கொடுக்கவும் மாத்து ஆறு,

<u>லிங்கச் சுத்தி:-</u>

லிங்கத்தை ஒரு துணியில் டொலாயனங் கட்டி கருப்பட்டி ஒரு காசுக்கு வாங்கி போட்டு தண்ணீர் அரைப்படி விட்டு நன்றாய்க் கரைத்து அதில் டொலாயனத்தை விட்டு நீர் சுண்ட எரித்து லிங்கத்தை தண்ணீர் விட்டு அலம்பி சிறிது நேரம் வெய்யிலில் வைத்து எடுத்துக் கொள்ளவும். நல்ல சுத்தி.

<u>மாந்தத்திற்கு பிள்ளை களுக்கு மருந்து:-</u> ✓

பெருங்காயம் ரூ.உ, சாதிக்காய் ரூபாயெடை 2, திரிகடுகு, ஓமம், பூண்டு, ஏலம் வகைக்கு ரூபாயிடை.1, லவுங்கம், வசம்பு, சாதிபத்திரி வகைக்கு ரூபாயிடை.2 காடவரையிலை ரசம் வதக்கி சாறு பிழிந்து இதிலரைத்து உருண்டை செய்து ரவியில் வைத்து முலைப்பாலில் கொடுக்கவும்.

*****

பண்பான திரிகடுகு வாய் விளங்கந் தாளிசப் பத்திரி யுடனின்னமும்
செங்கழு நீர்க் கோட்டமதி மதுர மிந்துப்பு சீரகம் நன்னாரி வேர்
சேர் விலாமிச்சரத்தை யுடன் கஸ்தூரி செயமான குங்குமப்பூ
சேரிவை வகைக்குக் களஞ்சாறு பின் பருத்தி விதை மாவோர் பலம்
செவ்வாழைச் சருகு சுட்ட சாம்பற் பலஞ் சேர்த்திவை யெலாமிடத்தே.

<u>இதுவு மது.</u>

இடித்த சூரணம் பாகிலிட்டு மூக்குத் தேனும் விட்டு நன்றாய்க் கிளரியே
இறக்கி வைத்ததைங் கரத்துப் பூசை பண்ணியே யியல முக்களஞ்சு லேகியம்
திடத்துடன் கொள் தினந் தீரும் வியாதி சாத்தி வாதமே பயித்தியம்.

தீமையாரோசிய மக்கினி மாந்த முளைலத் தாகம் மேல் நோக்கு வாத மிருமல்
படுத்திளைப்புக் குன்மமுங் கிறுணி பாண்டுடம் புலர்த்துப் பாழான சயமும்
பரவையேழுங் கடந்தோடு மினமும் வியாதி பலவுந் தொலைந்து போகும்
சடத்திலுள்ள நோயெல்லாம் போகுமிதினற் பெருமை சாற்றவு மெனக்கு வசமோ
சாற்றுதற் கரிய வசுவனி தேவதை களாற் சொல்கின்ற முறைதானிதே.

<u>பாலசஞ்சீவி மெழுகு.</u>

திங்களணி சங்கரன் றந்தவைங்கா லடியென் சென்னியிற் சூடி மேகத்
தினிலெழும் நோயெலா தீரவே பாலசஞ்சீவி மெழுகொன்றுரை செய்வேன்
பொங்குமுள் கொடிவேலி வேர்ப்பட்டை தூதுவிளம் வேர்ப் பட்டை வேம்பின் பட்டை
பூவரசம் வேர்
பட்டையும் பறங்கிப் பட்டை பொடி செய்து வாலரசமும்
இங்கிவைகளாறுமே சரி நிறையதா எடுத்தினிய கொம்புத் தேனை விட

டேயரைப்பாய் நான்கு சாம மெழுகாம் பின்னெடுத்து நீ சிமிழில் வைத்து
மங்கையே யருபான வகை தெரிந்தே கொள்ளிலன் பிணிகள் வாரி புகுமே.
உண்மையுளதா மிதன் பெருமை சொல் வெளியதோ மாதவர்கள் சொன் முறையிதே.

1¥
31.1.63.

பரணி மருந்து.

ஆதிபகவன் றந்தவேழ முகனடி பணிந்தழகான பரணியின் மருந்தது சொல்லுவே னிரதமொரு
மூன்று தாமரி தார மொன்றிங் கொன்று வாளம் பத்து கருசிருபதாந்
தொட்டி சுட்ட கரியது பத்து யிந்தப்பு மொன்றரைப் பனங் கற்கண்டு
மேழ் கருஞ்சீர மொன்றுகு மிளை விராகனிடை தான்

நீதியுட் னீதெலாம் வேலியின் சார் விட்டு நீ பகற் கொரு சாமமே நிச்சயமு
முதாகவே ரெண்டு தினமறை பின்பு நேர்மையாய் மூன்றுந் தினம்
நிலைமையுள தாழையின் காயிநடை பால் விட்டு நேராக ரெண்டு சாமம்
நீ யரைத்திறகும் பதந் தனிற் காராவினீள் கொம்பு சிமிளில் வைத்து

கோதிலா நாவிலொரு பணவிடை கொடுக்கவே கொடு விஷமெலாந் தீர்ந்திடுங்
கொள்ளு சுக சன்னி முறிலொன்று நிரண்டு தோஷங்களுங் குடி போகுமே
கொடிய காமாலை பன்ரண்டு வஷ. பாகமுங் கூழு மலசல மடைப்புங்
குணமாறல் சதுர் மாறலை பத்து நாலு சுரங் கொள் பலவலி தளியாவும்

சூதுடையதா மிப்பிகளெலாங் கடல் புகுஞ் சொர்ன வவுஷத மாமிது சொல்லார்
களறுபான வகை தெறிந்தே கொடு சொல் விரோசனமு மாகுங்
சொல்லரியதா மிதின் பெரும யிவ்வள வென்று சொல் வெளியுறு கூடுமோ
ஞாய தவிசின் மேவு மாதவர்கள் சொன்ன முறை தோன்றிட வகுத்தவாறே.

வனமூலி காய்பிரான பூபதி மாத்திரை:-

பசுவின் எருமுட்டை சுட்ட சாம்பல் ஏழு தரம் வடிகட்டி வைத்துக் கொண்டு
இதின் கூட அம்மான் பச்சரிசியும் கீழ்க்காய் நெல்லியும் பொடுதலை கண்டங்கத்திரி
வேலிப்பருத்தி நல்லவேளை வசம்பு சுட்டரைத் தூள் இந்தஒன்பதும் வகை ஒன்றுக்கு
ஆறு விராகனிடை வீதம் கூட்டி எட்டுப் படி பசுவின் பாலில் வேக வைத்து ஒரு படியாகச்
சுண்டின பிறகு இறக்கி வைத்து இந்த மருந்தெல்லாம் கல்வத்திலிட்டுப் பால் செலவழியும்
வரையும் அரைத்து மிளகுப் பிரமாணம் உருண்டை செய்து நிழலில் உலர்த்தி கொம்புச்
சிமிளில் வைத்துக் கொண்டு தேனிலாவது முலைப்பாலிலாவது உரைத்து நாக்கில் தடவ
போன பிராணன் மீண்டு வந்து மூன்றே முக்கால் நாழிகை நின்று பேசுவான். சாத்திய
ரோகம் விடுகிற சுரமானால் வாத பித்த சிசிலேற்றம் முதயமாகி உடம்பு வேர்த்துத்
தளசுரமாகில் பிழைப்பான். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். இது கை கண்ட
தென்றறியவும்.

சுரம் நாலு நாழிகையில் விட மாத்திரை:-

அரிதாரம் விராகனிடை ஒன்று, கெளிரி விராகனிடை ஒன்று இவை இரண்டையும்
உத்தாமணிச் சாறுவிட்டு ஒரு சாம மரைத்துப் பயரளவு உருண்டை செய்து வைத்துக்
கொண்டு நெற் பொறிக் கசாயத்திலாகிலும் இஞ்சிச் சாற்றிலாகிலும் கருப்பஞ் சாற்றி
லாகிலும் சுரமறிந்து கொடுத்தால் ஒருமாத்திரையில் மூன்று நாழிகையில்ச் சுரம் விடும்.
இந்தக் குளிகை (முசுக்கு) அதாவது (பலம் வந்த போது) வேலிப்பருத்தி ரசத்திலிட
ஒரு புறம் விடும். பத்தியம் எச்சரிக்கையாய் இருக்கவும்.

சுரம் ஏழு நாழிகையில் விட்டு விட மாத்திரை:-

இரதம், கெந்தி, நாவி லிங்கம், தாரம், நவாச்சாரம், துத்தம், வெங்

காரம், பொன்னு மத்த விரை, திரிகடுகு, இவைகளை சமன் கூட்டிக் கடுகு ரோகணிச் சாற்றில் ஒரு சாமமரைத்து உழுந்துப் பிரமாண முருட்டி நிழலிலுலர்த்தி தாப சுரத்துக்கு இள வெந்நீரிலிடவும். அக்கினி சுரத்துக்குப் பசுவின் பாலிலிடவும். சேற்றம சுரத்துக்கு ஆடா தோடை புட்டவித்துப் பிழிந்த சாற்றிலிடவும்.

பஞ்ச கௌவிய கிருதம்:-

பசுவின் பால், நெய், தயிர், கோசலம், கோமயம் இவை ஐந்தும் ஒரொன்றுக்குப் படி ஆறு, இத்துடன் திரிபலை, வசம்பு, திப்பிலி, மரமஞ்சள், அதிமதுரம், மஞ்சட்டி, கடுகு, குரோசாணி, வாய்விளங்கம், முத்தக் காசு, முந்திரிப் பழம், ஏலம், கொடிவேலி வேர், ஆடாதோடை இலைச் சாறு வட்டத் திருப்பி இது ஒரொன்று பலம் நான்கு வீதம் கூட்டி அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து ஒரு சுத்தமான பலகையில் உலர்த்தி பலகைக்கு நூல் சுத்தி வஸ்திரந் தரித்து அலங்கரித்து தானிய மண்டலத்திலே வைத்துப் பூசித்துப் பிராமணரைக் கொண்டு மிருத்திர பந்து சாந்தி புருஷ சூக்தம் கிருத சூக்தம் முதலிய விசேஷ மந்திரங்களும் பஞ்சாட்சரமும் செபித்து பிராமண போஜனமுமிட்டு தெட்சணை தாம்பூலமுங் கொடுத்து வயித்தியனையும் சந்தோஷம் செய்து ஆசிர்வாதம் பண்ணி வைத்துக் கொண்டு (நித்தமும் முக்களஞ்சு நெய் காலமே கொண்டு வருவதும் பொய் சொல்லாமல் இரண்டு நினையாமல் சுத்தமாயிருப்பது. புருஷர்களும் பெண்களும் இந்தப் படி கொண்டால் விரும்த்தியாதி தோஷமுந் தீரும். புத்திரருண்டாம், வியாதிகளெல்லாந் தீரும். மலடிகளும் பிள்ளையுண்டாவார்கள். இது சதாசிவன் சொன்ன முறையென அறியவும்.

மதன கமேசுர லேகியம்:-

திரிகடுகு, திரிப்பலை, ஏலம், லவங்கம், பச்சிலை, நாசப்பூ, வகைக்கு விராகனிடை இரண்டு, இரட்டி மதுரம் அமுக்குறம், முத்தக் காசு, நிலப்பனங்கிழங்கு, சதாவேரிக் கிழங்கு, நெரிஞ்சி, உழுந்து, கடலை, கோதுமையரிசி, முருங்கைப் பிசின், பூனைக்காலி விதை, குருசாணி ஓமம், கசகசா மராட்டி மொக்கு காம்பூ, அபினி நீர்முள்ளி விதை, கூகநீறு, சீந்தி நீர் வகைக்கு விராகனிடை நான்கு சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு வகைக்கு விராகனிடை ஆறு, பூமிச் சர்க்கரைக் கிழங்கு பலம் அரை. இது வெல்லாம் இடித்துப் பொடித்து வஸ்திர காயம் செய்து வைத்துக் கொண்டு பொடிக்குச் சமன் சுத்தி செய்த மூலிகையும் கூட்டி எல்லாங் கலந்து எருமைப் பால் இடங் கழி இரண்டு தண்ணீர் இடங்கழி இரண்டு இத் இரண்டு மடுப்பில் வைத்துக் கொதித்தவுடனே ஆறு பலம் முருங்கைப் பூவும், போட்டு ஒரு இடங் கழியானல்ப் பூவை அரிச்சுப் போட்டு பின்னைக் குழக்கி இரு நாழியாலுல் இந்தப் பொடிக்குச் சமன் வெல்லம் போட்டுக் கிளரி லேகிய பதத்திலிறக்கித் தானிய புடம் வைத்துத் தின்னவும். இதுக்குத் தீரும் வியாதி யாவன: தாதுவர்த்தனை யுண்டாம். வீரியமுண்டாம். நீர்க்கடுப்பு, நீர்ச் சுருக்கு, வாய்வு, அக்கினி மந்தம், புத்திப் பிரமை, ஆசனக் கடுப்பு, வெள்ளை விழுகிறது நிற்கும், மலசோதனையுண்டாம். ஆசனத்திற் சீய் விழுகிறதும் அஸ்தி சுரமும் சரீர மெலிகிறதும்; உடம்பு வற்றி யஸ்தியுருகிறதும், மேகமும் சிரங்குகளும் கைகாலெரிவும், சரீர வரட்சி கண்ணெரிச்சல், காமாலை, குன்மமும் வெகு மூத்திரம், வயிற்று வலி, ~~அக்கினி மந்தம்~~, பெரும்பாடு, தீபனமுண்டாம். வயிற்றிரைச்சல், வயிற்றிழுதல், புளிந்தேப்பம், அடிக்கடி நீர் விடுகிறது இந்த வியாதியெல்லாந் தீரும். கை கண்டது. மதனகாமென்று பேர்.

திருவனை யடைத்தான் குளிகை:-

சாதிக்காய், கிராம்பு, வசுவாசி, சாதிலிங்கம், கல்மதம், கல்நார், கெருடபச்சை, குரோசாணி, ஓமம், ஊசிக் காந்தம், அக்கராகாரப் பட்டை, காசுக் கட்டி இவை யெல்லாம் வகை ஒன்றுக்கு விராகனிடை ஐந்து ஊமத்தம் விதை விராகனிடை இரண்டரை அபினி மருந்து விராகனிடை இரண்டரை ஆக மருந்து விராகனிடை அறுபதையும் ஆவரை விதை விராகனிடை அறுபதையும் ஆக விராகனிடை நூற்றிருபதும் கலவத்திலிட்டு எருமை மோர் வார்த்து மூன்று நாளரைத்து சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு எருமை மோரிலாவது எருமைத் தயிரிலாவது அந்தி

சந்தி நான்கு நாள் அல்லது ஐந்து நாள் கொடுக்க இருபத்தொரு வகை நீரழிவும் தீரும். இது கை கண்ட மருந்து.

இராஜ_ராஜாதி_ரசாயனம்:-

முந்திரிப் பழம் பலம் பத்து, தேன் படி ஒன்று, பசுவின் நெய்யும் படி ஒன்று, திரிகடுகு, திரிபலை, அதிமதுரம், கோஷ்டம், பச்சிலை, சிறுநாகப்பூ, சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, ஏலம், கல்நார், கல்மதம், சலாசத்து, வால்மிளகு, தக்கோலம், பேரீச்சம் பழம், சடாமாஞ்சி, சீரகம், கருஞ்சீரகம், வெப்பாலையரிசி, விளாலரிசி, விலாமிச்சம், கோரைக்கிழங்கு, அமுக்கிலாங் கிழங்கு நிலப்பனங் கிழங்கு, நன்னாரி வேர், சித்தாமுட்டி, குரோசாணி யோமம், கோரோசனை குங்குமப் பூ, அதிவிடயம் இவை வகை ஒன்றுக்கு விராகனிடை நான்கு. இவைகளை இடித்துச் சூரணம் செய்து சட்டி வைத்து தேன் விட்டு முந்திரிப் பழவிதை போக்கி மத்திச்சு எடுத்து வைத்துக் கொள்ளவும். நேரமொன்றுக்கு நெல்லிக்காயளவு தின்ன சலக் கழிச்சல் முதலான மேகமெல்லாந் தீரும்.

அசாளியாதி_குளிகை.

அசாளி கிரியாதது புத்தரிச் சுண்டை வேர் மேல் தோலி, சீரகம், வகைக்குக் கழஞ்சு ஒன்று சீரகக் கசாயத்தில் அரைத்து பச்சைக் கற்பூரம் பணவிடை இரண்டு புனுகு பணவிடை இரண்டும் கூட்டி அரைத்துக் குன்றிப் பிரமாணம் உருண்டை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு சீரகக் கசாயத்தில் ஒரு குளிகை ஒரு நேரத்துக்குக் கொடுக்கவும். இப்படி ஆறு நேரங் கொடுக்கச் சகல வியாதியுந் தீரும்.

மகா_ஏலாதி_சூரணம்:-

சாரணை வேர், சதாவரிக் கிழங்கு, வட்டத் திருப்பி வேர், முத்தக் காசு, நன்னாரி வேர்,நெய்தற் கிழங்கு, நிலப்பனங் கிழங்கு, ~~தா~~ தாமரை வளையம், ஆடாதோடை வேர், அத்திப் பட்டை, கருவேப்பிலைத் தண்டு, சீந்திக் தண்டு, நெருஞ்சி வேர், தூதுவளை வேர், செங்கத்தாரிப் பட்டை, அக்கிரகாரம் ஏலம், நாகப்பூ, திப்பிலி, திப்பிலிமூலம், அகில சந்தனம், மாஞ்சில், கச்சோலம், சுக்கு, மிளகு, கொத்தமல்லி, தேவதாரம், சிறுதேக்கு, விலாமிச்சம், தாளிசப் பத்திரி, சாதிக்காய், கிராம்பு, கற்பூரம், சந்தனம், செஞ்சந்தனம், திரிபலை, சாமியரிசி, குந்திருக்கம், தக்கோலம், வெப்பாலயரிசி, விளாலரிசி, கார்க்கோலரிசி, கம்பிப் பிசின், அத்தித் திப்பிலி, கடுகுரோகணி, இருசீரகம், மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், அரத்தை, ரேணுகம், கூகநீர், சாதிப்பத்திரி, இலவங்கம், அதிமதுரம், முந்திரிப் பழம், பேரீச்சம் பழம், இது சமனிடித்துச் சூரணஞ் செய்து சீந்தியிலைச் சாற்றில் பிசைந்து சற்று நேரமிருந்த பிறகு இடித்து வஸ்திர காயம் செய்து வைத்துக் கொள்ளவும். இதற்கு அநுபானம் பழைய வெல்லம் (அல்ல) பஞ்சதாரையில் வெருகடி சூரணத்துக்குச் சரி கூட்டி காலையில் பசுவின் நெய்யிலும் சாயங்காலம் தேனிலும் கொள்ளவும். இதற்கு தீரும் வியாதிகளாவன சத்தி, சத்தி ஜன்மம், ரத்த பித்தம், உடலெரிவு, குலையெரிவு, உளக்காச்சல், மேகம் இருபதும் நீங்கும். மூச்சுச் சுவாசம் வாயில் நீருரல் மூலம், உளப்பிரமேகம், நெடுநாளெடுத்த சுக்கிலம், கண்ணில் வியாதி நேத்திரரோகம் தாது மார்பு வலி நெஞ்சு யிருக்கல், குரலிருகல், மயக்க மதி மயக்கம், க்ஷயம், பாண்டு, காமாலை, பாண்டுரோகம், மூலத்திலெழுந்த வியாதி, பவுத்திரவியாதி குட்டம், தண்டுப் புத்து இவைகள் நீங்கும். இது கை கண்ட மருந்து.

க்ஷயரோகத்துக்கு_நெய்:-

நெல்லிக்காய்ச் சாறுபடி இரண்டு, நெய் படிஒன்று, நல்லெண்ணை படி அரை, தண்ணீர் முட்டான் கிழங்குச் சார் படி ஒன்று, நிலப்பனங் கிழங்குச் சார் படி ஒன்று, வெள்ளாட்டுப் பால் படி ஒன்று, கருப்பஞ் சார் படி ஒன்று, தலையீத்துக் கிடாரிப் பால் படி ஒன்று, தயிர்த் தண்ணீர் படி ஒன்று, சுக்கு, திப்பிலி, மிளகு வகை ஒன்றுக்கு விராகனிடை எட்டு இவைகளைச் சூரணம் செய்து நெய்யில் போட்டுக காய்ச்சி மெழுகு

பதத்திலிறக்கி வடித்துத் தேன் படி ஐந்து, பஞ்ச தாரை பலம் இரண்டு முந்திரிப் பழம் பலம் எட்டுப் போட்டு எடுத்து வைத்துக் கொண்டு தினம் இரண்டு நேரமும் ஒரு சுட்டிடை உள்ளுக்குக் கொள்ளவும். இதற்குத் தீரும் வியாதிகள் க்ஷயரோகம், சுவாசகாசம் செய்ய தாதுபாண்டு பயித்தியம் உளமாந்தை ரத்தக் கிராணி அதிசாரம் மந்தார காசம், அஷ்ட குன்மம், வாந்தி இது வெல்லாம் தீரும். இது கை கண்டது மருந்து.

__தாளிசப் பத்திரி வடகம்:-__

திப்பிலி, திப்பிலிமூலம், செவியம், சித்திரமூலம், மிளகு, தாளிசப் பத்திரி, இவை வகை ஒன்றுக்கு பலம் ஒன்று, ஏலம், லவங்கம், சீரகம், சுக்கு, சிறுநாகப்பூ, சாதிக்காய், கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், விலாமிச்சம் வேர், லவங்கப் பத்திரி, அதிமதுரம், சாதிப்பத்திரி, வால்மிளகு, கொத்தமல்லி, கருஞ்சீரகம் இவை வகைக்கு விராகனிடை மூன்று இவைகளெல்லாம் பொடி செய்து ஒரு நிறைப் பொடிக்கு மூன்று நிறைச் சீனிச் சர்க்கரை கலந்து வைத்துக் கொண்டு மூன்று படி பசுவின் பாலை ஒரு சட்டியில் விட்டு வேடு கட்டி அந்த வேட்டின் பேரில் முன் சொன்ன பொடியின் பேரில் கொஞ்சம் பாலைத் தெளித்து பலபலவென்று உதிரியாகப் பிசறி வைத்து பால் வந்த மட்டும் வேக வைத்துச் சர்க்கரையும் பொடியும் ஒன்று சேர்த்துப் பிசைந்து வில்லை கழஞ்சளவாகப் பிடிக்கவும். அந்தி சந்தி இரண்டு நேரமும் ஒரொரு வில்லை சாப்பிடவும். இதற்குத் தீரும் வியாதிகள் சத்தி விக்கல், அதிசாரம், தாபசுரம், அஷ்ட குன்மம், சித்தப்பிரமை, சிலேற்பும மூர்ச்சை, அருவருப்பு, கருங்காமாலை, மலபந்தம், பாண்டு வெப்பு, வாதாதி சாரம், வயிற்றிலுள்ள ஆமலங்கள் பீலிகை இது வெல்லாந் தீரும். இச்சா பத்தியம்.

__போஜன சஞ்சீவி.__

காசினியிற் பல பொருளும் படைத்தென்றுங் கார்த்திடுங் கர்த்தனைப் போற்றி செய்து போசன சஞ்சீவி ஆனதைப்
புகலுகிறேனிந்தச் செகமதனில் மிஞ்சிய பொரிகலம் சவுட்டு மண் மேவிய லவுங்கம்
பஞ்ச லவணம் கொஞ்சிய திரிகடுகு, மதுரம் கோஷ்டங் கஞ்சாவுடனவச்சாரம்

ஓமம் திப்பிலி மூலம் வகை வகைக்கொரு பல்மாகவே நிறையெடுத்து தாமதஞ் செய்யாமல் மருந்தெல்லாம் சட்டியில் வறுத்தெடுத்துச் சூரணஞ் செய்து பொரித்த வெங்காரமதை கல்வத்தில் போட்டு வெல்லம் ஆறு பலம் போட்டரைத்து உறித்த நல் வெள்ளைப் பண்டு ஐந்து பலம் ஒரு மிக்கச் சேர்த்தரைத்து யெடுத்துக் கொண்டு கலசத்திலிட்டு வைத்துச் சுண்டைக்

காயளவாகவே உருண்டை செய்து உலகத்தைப் படைத்த கர்த்தன் பதத்தை உருதி யென்றெண்ணித் தர்மம் ஈய்ந்திடு பின் காலையிலோருண்டை மாலையிலுங் கருதியோர் மண்டலம் அருந்திடவே நால்வகை வயற்றுக் கண்டியின்ன நன்மையில்லாத பேதி குன்மம் கிராணி அசீர்ணம் மந்த வாய்வு. குடுப்புக்கடுப்பு

அறிவை யர்க்கான தொரு சூக்க வாய்வும் பெரு வயிறன தெல்லாம் வயிற்றில் பெருகிய பலபல ரோகங்களும் அருள் தருஞ் சருவே சா அவருட ஆசிர்வாதத்தின் தெளிவாலே பருங்கதிர் சூரியனைக் கண்ட பனியென்ன நோயெல்லாம் பறந்திடுமே.

__வயிற்றுக் கடுப்புக்குப் பொடி.__

சுண்டை வற்றல்கரு நிதம்ப பத்திரி சுவைத்த மாங்கனி விரைச் சுனை
துய்ய மோதகமும் நெல்லி தாறுகனி தோலு வெந்தய மிதேழுமே
விண்டுரைத்தபடி யொன்று பட்டிட வெதுப்பியே யிளவறுப்பதாய்
மிருதுவாக வது வடி கொளீர் பொடியை வெருகடி யளவு தயிரிலே
கொண்டிடப் பொருமல் மந்தமிக்க வரு குமுறுகின்றிடு கழிச்சலும்
கோலமான அதிசார மொடுருசி நானி மூலமு மெடாதகை
கண்டதித்தனையும் பண்டிதத் தொழிலைக் கண்டிதத்துடனே நம்புவீர்
கருணை மாமதுர மொழிகு மாமகள் சொல் கருணை மாமதுரக் கவியிதே.

சாதிலிங்கக் குழம்பு. (ஆசிரிய விருத்தம்)

கணபதியினிரு சரண மது தொழுது சாதிலிங்கக்குழம்பைக் கழறுவேன்
கருவான சாதிலிங்க விராகன் நாலுரச கற்பூரம் விராகனென்று
குணமான நேர்வாள மதுவிராக னென்பது கொள் மோடி விராகனுடை
குற்றமில்லா மணக்கள் பருப்பும் விராகன் கூட்டுவாய் நாலுதானே
சிமமாக வேயிதைந் து சுத்தி செய்து நாற் சாமம் நீ திறமாயரைத்
தெருமையின் பெரிய கொம்புச் சிமிழில் வைத்துபானந் தெரிந்தே கொடு
சுலிவாதம் சகல நோய்களும் வயிறு போமத் ஈடு சுலம் பருகியே மோருஞ்
சோறுமுண்டிட் மாறு மோதுதற் கரிய பெரியோர் சொன்ன முறைதானிதே.

மேக விரணங்களுக்கு என்ணெய்:-

வருத்துூ த்தின் என்ணெ படி.2 பரங்கிப் பட்டை பலம்.1, கருஞ்சீரகம் துட்டிடை 4, ஈரவெங்காயச் சார் படி.½, கெருடக் கிழங்கு துட்டிடை.16, பாச்சான் பட்டை துட்டிடை.2, இது வெல்லாம் என்ணெயில் போட்டு ஒரு நாள் ஊற வைத்து மறுநாள் அடுப்பில் வைத்து மெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு மூன்று நாள் கொள்ளவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். இது கை கண்ட மருந்து.

பித்தத்துக்கு சூரணம்:-

ஏலம், அதிமதுரம், சீரகம், கோஷ்டம் சுக்கு, மிளகு, திப்பிலி, பருத்தி விதைப் பருப்பு, வெட்டி வேர், விலாமிச்சம் வேர், வில்வத் தளைச் சூரணம் நெல்லி வடகம் கல்நார், இவை வகைக்குத் துட்டிடை முக்கால் சூரணஞ் செய்து எலுமிச்சம் காய்க் குள்ளே மத்திச்சுச் சூரிய புடம் வைத்து வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். பித்த மென்றதெல்லாந் தீரும். கை கண்டது..

வாதம் 80-க்கும் என்ணெய்:-

வேப்பென்ணெ, புங்கென்ணெ, ஆமணக்கென்ணெ, புன்னையென்ணெ, எள்ளென்ணெ, வகைக்கு படி.½, வெள்ளுள்ளி, வசம்பு, காயம், திரிகடுகு, ஓமம், லவங்கம், சதகுப்பை, கடுகுரோகணி சித்திரமூலம் வகைக்குப் பலம்.½, காடி படி.2 இதிலரைத்துக் கரைத்து முன் சொன்ன என்ணெ ஐந்தையும் கூட விட்டு கலக்கி அடுப்பேற்றி மெழுகு பதத்தில் வடித்து அவளையிட்டுக் காய்ச்சிப் பிடிக்க வாதம் எண்பதும், சூலை பதினெட்டும் திமிர் வாதம், பிறவிச்சு வலி ஐந்தும், நடுக்கு வாதம், கடுப்பு வலி மடைச்சல் இது வெல்லாந் தீரும். காசிடை உள்ளுக்குக் கொள்ளவும்.

சன்னி 13-க்கும் என்ணெ:-

வேப்பென்ணெ, புங்கென்ணெ, புன்னை என்ணெ உ, பசுவின் நெய், காட்டாமணக் கென்னை வகைக்குப் படி கால், முருகு முட்டை படி கால், கோழி முட்டை பத்து சாதி லிங்கம், கெந்தகம், ரசம், பாஷாணம், கருநாபி, மிளகு, திப்பிலி, கெஜதிப்பிலி, லவங்கம், வாளம் இவை வகைகளுக்கு கழஞ்சு.1, இது வெல்லாம் கொடிவேலிக் கசாயத்தில் அரைத்து அடுப்பேற்றிக் கொதிக்கும் போது எருக்கம் பால், பாச்சான் பால், திருகு கள்ளிப் பால் இதுகள் வகைக்கு படி கால் முலைப்பால் ஐந்து பேர்களிடத்தில் கால்படி வாங்கி கஸ்தூரி கழஞ்சு ஒன்று கரைத்து விட்டு தேசிப் பால் படி கால் காட்டெருமை பால் பலம் ஒன்று, ஆத்தலரியிலை பிடியொன்றும் போடவும். வெள்ளுள்ளி பலம் ஒன்று அரைத்துப் போட்டு மெழுகு பதத்தில் வடித்து கோரோசனை கழஞ்சு ஒன்று பொடித்துப் போட்டு துட்டிடை உள்ளுக்குக் கொள்ள சன்னி பாதமென்றதெல்லாம் தீரும்.

தராங்கிஷம்:-

சாதிலிங்கம், கருநாபி, கெந்தகம், வெங்காரம், திரிகடுகு இவையெல்லாம்

சேர்த்து எலுமிச்சம் பழச் சாற்றில் ஒரு சாமமரைத்துக் குன்றிப் பிரமாண முண்டை செய்து வைத்துக் கொண்டு அநுபானம் விசேஷத்தில் மூன்று வேளை கொடுக்கவும். பத்தியம் புளி தவிர்க்கவும். முரிவு சிறுக்கீரை, நீலிவேர், மிளகு இவை போட்டு கசாயம் செய்து கொள்ளவும்.

வல்லாரை கிருதம்:-

வல்லாரைச் சார் சீரார் செங்கழு நீர்ச் சார் கையாந்த கரைச் சார், பசுவின் பால், இளநீர் வகைக்கு படி.2 சாரம் நெய்யுங் கலந்து கொண்டு மந்திட்டி கோஷ்டம் செங்கழு நீர்க் கிழங்கு அவுரியிலை கோரோஜனம், பச்சிலை வகைக்கு விராகனிடை பத்து இவைகளைப் பால் விட்டரைத்துக் கரைத்துக் காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி வடித்துக் கொள்ளவும். இரண்டு நேரமும் ஒரு கட்டிடை கொள்ளத் தீரும் வியாதிகள் கன்கால், உடம்பெரிப்பு, உடம்புலர்தல், மருந்தீடும், இருமல் பாஷாணம் முதலானவை தின்ற தோஷமும் தீரும்.

மகாவில்வாதி லேகியம்:-

வில்வ வேர் பலம்.50, நன்னாரி வேர் கட்டிடை 20, சித்திர மூல வேர் விராகனிடை.12, வேப்பீர்க்கு விராகனிடை.20, விலாமிச்சம் வேர் கட்டிடை.8, சித்தாமுட்டி வேர் விராகனிடை.35, பேராமுட்டி வேர் விராகனிடை.35, முன்னை வேர் கட்டிடை 20, பேய்ப்புடல் கட்டிடை.20, முசுமுசுக்கை வேர் கட்டிடை 29 கோரைக் கிழங்கு கட்டிடை.20, அருகன் வேர், தூதுவளை வேர், கண்டங்கத்திரி வேர், சந்தனக் கட்டை, நிலக்குமிள் வேர், நெருஞ்சி வேர், அலசி வேர், வாகை வேர், நிலவாகை வேர், குட்டி விளம் வேர், பாதிரி வேர், நிலப்பாதிரி வேர், குமிளம் வேர், தேத்தான் வேர் வகைக்குக் கட்டிடை.3, தண்ணீர் படி.40 இவைகளை எட்டிலொன்றாகக் கசாயம் சிகா குருக்கிக் கொள்ளவும்.

முசுமுசுக்கைச் சார், ஒரிலைத் தாமரைச் சார், விளாம்பழ லூன், கண்டங்கத்திரி சார், கருப்பன் சார், மாதளம் பழச் சார் இஞ்சிச் சார், வல்லாரைச் சார், தாளை விழுதச் சார், கத்தாழை வேர்ச் சார், தண்ணீர் விட்டான் சார், எலுமிச்சம் பழச் சார் வகைக்குப் படி.½, இதை கசாயத்துடன் விடவும். பெரிய பலத்தில் வெல்லம்.50, கரைத்துப் பாகு செய்யவும். திரிகடுகு, திரிபலை சீரகம் பருத்தி விதை ஏலம், சந்தனம், தேவதாரம், லவங்கம், லவங்கப் பத்திரி, விளாவரிசி, தேசாபுரம், சடாமாஞ்சி, நெய்தற் கிழங்கு, கிரிராட்சைப் பழம், கற்கூரைப் பழம், சயிந்த லவணம், சாதிக்காய், சாதிப்பத்திரி, அதிவிடையம், கோஷ்டம், வெந்தயம், தாமரைக் கிழங்கு ஓமம் குருசாணி ஓமம் சோம்பு கசகசா கல்நார், கூகநீர், கொத்தமல்லி, நிலப்பனங்கிழங்கு வகைக்குக் கட்டிடை.3, குங்குமப்பூ, கோரோசனம், பச்சைக் கற்பூரம், வகைக்கு விராகனிடை.½ இது வெல்லாம் வருத்து சூரணம் செய்து கொள்ளவும். நெய்படி.2 தேன் படி.1½இ லேகியங் கிளரி எடுத்துக் கொள்ளவும். நெல்லிக்காய் டிபிரமாணம் இரண்டு நேரமும் சாப்பிடவும். இதற்குத் தீரும் வியாதி பித்தம்40, அரோசியம், அக்கினி மாந்தம், க்ஷயம், குன்ம வாய்வு, இது முதலானதவுந் தீரும். க்ஷயத்திற்குத் தங்க பற்பஞ் சேர்த்துக் கொள்ளவும்.

அஷ்ட குன்மம், அந்தர வாய்வு முதலானதுகளுக்கு மருந்து:-

பெரிய பலத்தில் இந்துப்பு பலம்.2, வெங்காரம் பலம்.1, திப்பிலி பலம் ½, சுக்கு பலம்.2, மிளகு பலம்.1, வெள்ளுள்ளி பலம்.2, ஓமம் பலம்.2, இந்த மருந்துகளைப் பொடி செய்து நல்ல முத்தின தேங்காய் கண் திறந்து அதிலுள்ள நீரை ஊத்தி விட்டு இந்தப் பொடியெல்லாம் அந்த தேங்காய்க்குள் மத்திச்சு முன்னை கெட்டிச்சு வாய்க்கு ஆவரை யாப்புச் செடிஞ்சு தீயில் வாட்டவும். அந்த ஒடு வெடித்தவுடனே எடுத்துக் கொண்டு அந்த மேலோட்டை தள்ளி விட்டுத் தேங்காயுடனே குட குழிக் கல்லில் நன்றாயாட்டி தேன்விட்டு மின்னைக் கோல் கொண்டு கிளரி வைத்துக் கொள்ளவும். நோக்கம் பார்த்துக் கொண்டு மருந்து கொடுக்கவும். இதற்கு தீரும் வியாதிகள் குன்மம் எட்டு அந்திர வாய்வு முதலான சகல வாய்வும் தீரும். பத்தியமில்லை. காலையில் தயிருஞ் சாதம்

சாப்பிடவும். சேராத பதார்த்தங்களைச் சேர்க்கவும்.

தம்பெண்ணை.

வல்லாரைச் சாறு படி.2, சவுரிக் கிழங்குச் சார் படி.2, குமிளம் வேர்ப் பட்டைச் சார் படி.2, பசுவின் பால் படி.2, இளநீர் படி.2, சுருள்ளிச் சார் படி.2, கம்மங் சேர்த்தத் தண்ணீரில் புழுக்கி ஊத்தின வெடி கொட்டை எண்ணை படி.2, இதுவெல்லாம் கலந்து காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும். இதற்கு வடி கலசத்திற் போட மருந்து சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம் வகைக்கு குட்டிடை.1 இவ வருப்பாய் வருத்துப் பொடி செய்து கலசத்தில் போட்டு எண்ணை வடித்துக் கொள்ளவும். சகல உஷ்ணமுந் தீரும்.

சிங்கிப் பற்பம்:-

கலங் கொம்பைக் கோமூத்திரத்தில் ஊறப் போட்டு பின்பு எடுத்த சுண்ணம்பில் பிசரி ஒட்டில் வைத்துப் புடமிடவும். பின்பு எடுத்துக் கத்தாளஞ் சாற்றில் ஒரு சாமம் அரைத்து வில்லை செய்து காய வைத்து ஆவரந் தழை யிடித்துக் கவசங் கட்டிப் புடமிடவும். பின்பு நெல்லரிசிக் காடியிலரைத்து வில்லை செய்து காய வைத்து ஆவரந் தழை இடித்துக் கவசங் கட்டிப் புடமிடவும். பின்பு பசுவின் பாலிலரைத்து வில்லை செய்து காய வைத்துஅகத்தி தழையை அரைத்துக் கவசம் கட்டிப் புடமிடவும். பின்பு எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து வில்லை செய்து காய வைத்து ஆவாரந் தழை யிடித்துக் கவசங் கட்டிப் புடமிடவும். இப்படி ஐந்து புடமிட்டெடுத்து வைத்துக் கொண்டு வேண்டிய பிரயோகங்களுக்குக் கொடுக்கவும்.
இதற்குத் தீரும் வியாதிகள் உஷ்ணம், வலி, பொடியிருமல், நீர்க்கடுப்பு, பிரமியம்.
இது முதலானது தீரும். குழந்தைகளுக்கு கணை உடம்பிற்கு எண்ணையில் குழைத்துக் கொடுக்கவும்.

கணை யெண்ணை:-

ஆவாரம் வேர்ப பட்டை, கற்பூர வள்ளிச் சமூலம், வெள்ளைச் சாரணைச் சமூலம் கீழா நெல்லிச் சமூலம், சிறுகீரை வேர் இது வெல்லாங் கசாயஞ் செய்து வைத்து சித்தா மணக்கன் கொட்டை புழுக்கி ஊத்திக் கொள்ளவும். பின்பு கம்மங் சோத்துத் தண்ணீரும் இளநீரும் கலந்து எண்ணை வடித்துக் கொள்ளவும். அந்த எண்ணையில் இந்தச் சிங்கிப் பற்பம் கொஞ்சம் போட்டு அரைத்துக் கொடு. தினம் ஒரு கரண்டி கொடுக்க கணைகளெல்லாந் தீரும்.

குழந்தைகளுக்கு மாந்த எண்ணெய்:-

லவங்கம், கசகசா; சன்ன லவங்கப் பட்டை, கஸ்தூரி மஞ்சள், வசம்பு, சீரகம், சாதிக்காய், சாதிபத்திரி, வெட்பாலை விரை, மிளகு வகைக்கு விராகனிடை.1 கடுகுரோகணி பலம்.1, வெள்ளுள்ளி பலம்.1 வருத்து த்தின எண்ணை படி.2, இந்தச் சரக்குகளைப் பச்சையாய்ப் பொடி செய்து அந்த எண்ணையில் போட்டுக் களாரனிக்கம் கொண்டு வந்து சமூலமும் இடித்து மேல் தோல் நக்கிப் போட்டு வெண்மையா யிருக்கிற தெல்லா மெடுத்து அந்த எண்ணையிற் போட்டுக் கலசத்தில் விட்டு எருமைச் சாணியின் பேரில் வைத்துச் சூரியபுடம் வைக்கவும். மாந்தத்திற்கு சங்கிடை வார்க்கவும். இதற்குத் தீரும் வியாதி கட்டு மாந்தம் ஊமாந்தம், சொருகு மாந்தம், வலிப்பு மாந்தம், குழந்தை கருக்கு அடி இறங்கினது. இது முதலான பிணி பதினெட்டும் தீரும்.

வரிக் குமட்டி எண்ணெய்:-

வரிக் குமட்டிக்காய் கொண்டு வந்து முள்ளிலே குத்தி வரகன் வைக்கோலாவதல் வாழைச் சருவாகுதல் போட்டுச் சுடவும். பின்பு கல்லுரலல் இடித்துக் கம்பிளியில் போட்டுச் சாறு பிழிந்து கொள்ளவும். சாறு படி.2, வெங்காயச் சார் படி.2, எருமைச் சாணிப் பால் படி.2, எண்ணை படி.2, இந்தச் சாரும் எண்ணையும் கலந்து காய்ச்சி வடித்துக் கொண்டு கடுகு ரோகணி பலம்.1, வெட்பாலையரிசி, லவங்கம், கஸ்தூரி மஞ்சள், வசம்பு, கருஞ்சீரகம், சாதிக்காய், சாதிபத்திரி, மிளகு, வகைக்குத் குட்டிடை.1, கோரோசனம் விராகன்.1 இது வெல்லாம் பச்சையாய்ப் பொடி செய்து எண்ணையில் போட்டு வைத்துக் கொள்ளவும். தினம் ஒரு கரண்டி எண்ணை கொள்ளவும் இப்படி மூன்று நாள் கொள்ளவும்.

பத்தியத்திற்கு அவரைக் கொட்டையும் கத்தரிக்காயும் பசுவின் மோருங் கூட்டிக் கொள்ளவும் மேக வாய்வு முதலானதுந் தீரும்.

காளமேக நாராயண செந்தூரம்.

ரசம் விராகனிடை.30, சாதிலிங்கம் விராகனிடை.15, மடலரி தாரம் விராகனிடை.10, கெந்தகம் விராகனிடை.12, மனோசிலை விராகனிடை.4, இவை யெல்லாம் சுத்தி செய்து இதை அரைக்க செயநீரின் விபரம் கறியுப்பு, வெடியுப்பு, வெங்காரம், சீனக்காரம், காந்தம், கடல்நுரை, இந்துப்பு, கெந்தகம், இந்தஎட்டுச் சரக்கும் சமனிடை எடுத்துக் கொண்டு பிராந்திச் சாராயம் விட்டரைத்து மெலிய துணியை ரெட்டையாய் மடித்து அரைத்த சரக்கைத் துணிக்குள் வைத்து தளர முடிந்து பீங்கானிற் றேழாந்திரங் கட்டி செயநீரை எடுத்துக் கொண்டு முன் சொன்ன சரக்கைக் கல்வத்திலிட்டு இந்தச் செயநீர் விட்டு நாலு சாமமரைத்து கல்வத்தடனே நிழலிலுலர்த்திப் பொடி செய்து படிகக் குப்பியாவது காசிக்குப்பியாவது மண் செய்து குப்பி ஒன்றுக்கு பதினைு விராகனிடை மருந்திட்டுக் குப்பி வாய்க்கு வளப்பக் கல்லடைத்து உருந்தரைத்தப்ப மேல் மண் செய்து அகண்ட தாளி கொண்டு வந்து நான்கு விரல் பிரமாண மணலிட்டு அதிற் குப்பியை வைத்து மேலுங் குப்பி வாய்க்குத் தெரிய மணலிட்டு வாலுகா யேந்திரத்தில் வைத்து இரண்டு சாமம் கமலாக்கினி ஆறு சாமங் காடாக்கினி ஆக அச்சாமம் எரியிட்டுச் சீதளமாகக் குளிர்ந்த பின்பு எடுக்கச் செந்தூரமாம். அனுபான விசேஷடஙகளிற் கொடுக்கச் சகல வியாதியுந் தீரும். இதுக்கு இச்சா பத்தியம். நேரமொன்றுக்கு அரைப்பணவிடை செந்தூரங் கொடுக்கவும்.

பூரணாதி லேகியம்:-

சுக்கு, மிளகு, லவங்கம், சாதிக்காய், சாதிபத்திரி, செவ்வியம், அக்கிராக் காரம், கப்பல்தி விடையம், தேவதாரம், மந்திட்டி, வாய்விளங்கம், கொத்தமல்லி, சீரகம், கருஞ்சீரகம், கசகசா, கடுகுரோகணி, கூகை நீர், கற்பூர சலாசத்து, தக்கோலம், இலவங்கப் விரை, சிறுநாகப்பூ, ரேணுகம், கல்மதம் அபினி வகைக்கு விராகனிடை 3 சன்ன லவங்கப் பட்டை, பெரிய லவங்கப் பட்டை, வலம்புரிக்காய், நாமக்காய், தேத்தான் கொட்டை, பேரீச்சம் பழம், முந்திரி பழம், கற்கண்டு பனங் கற்கண்டு, நாட்டுச் சர்க்கரை, சீனிச் சர்க்கரை, வகைக்கு விராகனிடை.2½, பூனைக்காலி விரை மத்தங்காய் விரை, பன்னை விரை, தாதராவிரை, சட்டித் தகரை விரை, ஊசித் தகரை விதை, நெட்டைப் பிரமுட்டி விரை, வட்டப் பிரமுட்டி விரை, ஆலம் விரை, அத்திவிரை, அரசன் விரை, இச்சி விதை, புன்ய விருச்சன் விரை, புன்னை விரை, மரிக்கொழுந்து விரை, மருதன் விரை திருநீற்று பச்சை விரை வாகை விரை இலவம் விரை, முடக்கொத்தான் விரை, வேலிப்பருத்தி விரை, தூதுவளை விரை தத்தி விரை, வெள்ளைக் காவளை விரை, அகத்தி விரை, செவ்வகத்தி விரை, ஆத்தி விரை ஊஞ்சல் விரை, முருங்கை விரை, நாரத்தம் விரை, எலுமிச்சம் விரை, வாழைக்கிழங்கு, அல்லிக் கிழங்கு, தாமரைக் கிழங்கு, கொட்டிக் கிழங்கு, கோரைக்கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, அப்பக் கோவைக் கிழங்கு, பமிச்சர்க்கரை கிழங்கு மதனச் சர்க்கரைக் கிழங்கு, வெள்ளைச் சாரனைக் கிழங்கு, பழுபாகற் கிழங்கு, முத்தப் பழம், பருத்திக் கொட்டை வகைக்கு விராகனிடை.3, ஆலம் பிசின், ஆவரம் பிசின், ஊஞ்சல் பிசின், முருங்கைப் பிசின், வாகைப் பிசின், வகைக்கு விராகனிடை.3, கையாந்தகரை பொற்கையாந்த கரை, வல்லாரை, புளியாரை, முசுமுசுக்கை, நிலப்பாகிரி, அகத்தி, மாசிப்பத்திரி, இதுகள் தழைச் சூரணம் வகைக்கு விராகனிடை.9, கசாயம் வேப்பம்பட்டை சீந்திவேர், நன்னாரி வேர், வெட்டி வேர், விலாமிச்சம் வேர், நிலவேம்பு, சிவனார் வேம்பு, அமுக்கிலாங் கிழங்கு, வெள்ளருகு, தக்கிவேர், இளநீர் கஞ்சாக்கோரை, பழைய வெல்லம் சேர்.4 நெய் படி.1½, தேன் படி.3/4, லேகியம் கிண்டவும்.

மற்றொரு பூரணாதி லேகியம்:-

கஞ்சா, அமுக்கிலாங்கிழங்கு, தூதுவிளை வேர், சிறுகீரை வேர், சீந்திக் கொடி

வகைக்குத் துட்டிடை.3 இது கசாயம் சுக்கு ஓமம், திப்பிலி மூலம், கடுக்காய், கோஷ்டம், கொத்தமல்லி, அதிமதுரம், சன்ன லவங்கப் பட்டை, செண்பகப்பூ, வெட்டிவேர், தேத்தான் கொட்டை, நிலப்பனைக் கிழங்கு, நீர்முள்ளி வேர், கோரைக் கிழங்கு, கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, பேரீச்சம் பழம், அகில் கட்டை, முந்திரிப்பழம், சிறுநாகப்பூ, வால்மிளகு, சீரகம், தாளிசப் பத்திரி, சிறுதேக்கு, அதிவிடையம், கார்போகரிசி, முத்திருக்கன் செவி, பூனைக்காலிவிரை வகைக்கு விராகனிடை.3 அபினி விராகனிடை.1, பெருங்காயம் விராகனிடை.½, சீனிச்சர்க்கரை துட்டிடை.6, பனை வெல்லம் சேர்.2 நெய் படி.½, தேன் படி.¼, லேகியம் கிண்டவும்.

விரேசகக் குளிகை.

வெங்கார மிந்துப்பு வாய்விளங்கம் மிளகு சுக்குத் திப்பிலி யோமம் வசம்பு
லிங்க மெலியா மணக்கின் வேரின் பட்டை நெல்லி கடுதான்றி குருசாணி ஓமம்
பொங்கமுடன் வகை வகைக்கு விராகனென்று போடு சமன் நேர்வாளஞ் சுத்தி செய்து
சங்கை யறப் பழச் சாற்றிலு சாமந் தானரைத்துக் குளிகை செய் பாவட்டங் கயள்வே.

அளவான குளிகை வெல்லந் தனிற் கொள்ள வாதம் விரேசனஞ் சங்கஞ் சாற்றிற் கொள்ள
சளமான சேற்றுடுந் தொண்ணூ றிருடும் போஞ் சன்னிக்கு நொச்சியிலைச் சாறு விட்டு
பளமான மாதளஞ் சார் தன்னிற் கொள்ளப் பதற்றி விடும் பித்தமது வல்லாரைச் சாற்றிலது
தரமான குன்மம் போஞ் சன்னி தோஷந் தானகவு முலைப்பாலாஞ் சாற் றங் காலே.

சாற்றியதோர் சன்னி சுரந் தீரு மிஞ்சிச் சாற்றிலல் கொள்ள நேத்திர வியாதி
பூத்த நந்திச் சாற்றிலிடத் தீரு முஷ்டினம் போகுஞ் சீரகக் குடிநீர் தன்னிற் கொள்ள
சேற் வாய் வெடி மிர்குக் கசாயந் தன்னிற் றீந்து போம் பெரும்பாடு கூவிளத்தின்
சாற்றிலிடப் பிரமியம் போம் வெற் றிலைச் சார் கலிக்கத் தானிதுவே யேகாந்தப் பிரயோகமாமே.

கதலி கிருதம்.

திருவருள் சுரந்திலகு பொதியமலை முனிவனிரு சீர்பதந் தன்னை வாழ்த்திச்
செப்புகிறேன் கதலியின் கிருதமது கேண் மினே சிறந்த வாழைக் கிழங்கு
திரமான சார்குமரி யத்திநீர் வெள்ளரி தென்னையின் பாளையுடனே
சிறந்த வாழைப் பூச்சதர் வேரிசார் களிவை சேர் வகைக் கொரு நாழி தான்
கருவா திவெலா மொன்றுயளந்து விடு கற்கத்திரவியஞ் சொல்வேன்
கல்நாரு மேல மிலவங்க மதிமதுரந் கதித்திடுஞ் சாலிற பேதி (...)
காந்தையுள மந்திட்டி கிராம்பு மரமஞ்சள் கற்கண்டுடன் ...கை நீர்
அருமையுள முந்திரி பேரீச்சன் விளாம்பிசினதேடு வேலம்பிசின்

ஆக வகை யொன்றுக்கு நாற் களஞ்சா யெடுத்தரைத்து முன் சாத்திற் கரைத்
தாவின் னெய் குருணியது விட்டுப் பேற்றி யெரியது மெழுகு பதமதாகில்
ஐங்கரற்குப் பூசை செய்து வடி கலசத்திலன்பா யிருத்து வைத்து
பிரபலமதாக விரு நேரமும் சாப்பிட்ப் பிரமேக மிருபதும் போம்
பிசகாமலொரு மண்டலங் காவு பத்தியம் பேசுறேன் புளி புகையிலை
பேதகமில்லாமலே தள்ளி விடு சொந்தமாம் பெரியோர்கள் சொன்முறையிதே.

புனல் முருங்கைக் கிருதம்.

ஆசிரியம்.

புனல் முருங்கைக் கிருதமது சொல்லுவேன் முனிவர் பொற்பதம் போற்றி செய்து
புனல் முருங்கை வேரு பலமுப்பதா டிதைப் பொங்கமுடனே யிடித்துப்

புனிதமுடனே தூணி நீர் விட்டு நாலிலொரு பொற்பாகமா யிருத்துப்
போதவே பசுவின் நெய் பால் வகைக்கொரு படி புகட்டுவாய் கற்கவகை கேள்

கனமான திரிகடுகு வோமம் வெள்ளுள்ளி வெண்கார்வ ளையின் வேர் வசம்பு
காரமுள் ழுக்கரட்டை வேரு கொட்டி வேர் கன பெருங்காயமுடனே
கார்சினி யெலாம் புகழும் வீழி வேருஞ் சதுர் கஸ்தூரியின் பால் ஊட்டுவாய்.
அன்பமான நீர்சம் பிரடக் கிழங்கும் முட்சையின் பாலைப் பட்டையுடனே
யிவையெலாம் வகையொன்று முக்களஞ்சாகவு மெடுத்து வெள்ளாட்டமுது விட்
டிதயமா யரைத்துக் கரைத்தடுப்பேற்றியே யெறி மெழுகு பதமானபோ
வடித்தைந் தரற்குப் பூசை செய்துமே தினமுடனொரு தட்டிடை
மனமாகவே கொண்டு பார் பேதியாகு மதின் மகிமையாற் றீரும் நோய் கேள்
மகோதரம் பெரு வயிறு நீர்க் கோவை நீராமை மண்டு நீரழிவு கவுசை
மகாபலமதான மேற் கவுசை பீலிகையுடன் மலசலமடைப்பிவை யெல்லா
மாதவர்கள் அருமை யாற்றீரு மிதுபயமிலை வளமையுள கிருதமிதுவே.

பிரமி கிருதம்:-

பிரமி சமூலங் கொண்டு வந்து தண்ணீர் விட்டுக் கழுவிப் போட்டு இடித்துச் சார் பிழிந்து வடிகட்டி நாலு படி சாரும் நாலு படி நெய்யுங் கூட்டி அடுப்பில் வெதும்ப வைத்துக் கொண்டு கடைச் சரக்கு நெல்லிக்காய், சிவந்த வேர், கடுக்காய், மஞ்சள், இந்த நாலும் வகைக்குப் பலம்.1, திப்பிலி, வாய்விளங்கம், இந்துப்பு, கொடிவேலி, வசம்பு இந்த ஐந்தும் வகை கழஞ்சு.2, அரைத்து நெய்யில் கூட விட்டுக் காய்ச்சிப் பதத்தில் வடித்துக் கொள்ளவும். நேரம் ஒன்றுக்கு கழஞ்சு நெய். இரண்டு நேரமும் வாங்கினால் வாக்குச் சுத்தியாம். இந்தப் படிக்கு ஏழு நாள் சாப்பிட்டால் சாரீர முண்டாகும். 15 நாள் சாப்பிட்டால் வியாழ பகவானுக்கு சமதையாம். இது சரஸ்வதியினால் சொல்லப்பட்ட

பறங்கிப்பட்டை ரசாயனம்:-

திரிபலை, திரிகடுகு, சித்திரமூலம், வாய்விளங்கம், அரத்தை, திப்பிலிமூலம், கொன்று பறங்கி செவியம்சடமாஞ்சி, கோட்டம், நன்னாரிவேர், அதிமதுரம், கொத்தமல்லி, நிலப்பனங் கிழங்கு, அமுக்கிலாம் வேர், வகை 1-க்கு விராகனிடை 4 நெய்தான் மிதமாக விட்டு ரசயானம் செய்து கொள்ளவும்.

லோக செந்தூரம்:-

உருக்கு பலம்.1, ராவு பொடியாக்கி புளியிலைச் சாற்றில் வேக வைத்து வென்னீர் விட்டுக் கழுவிக் கொள்ளவும். பின்பு நல்லெண்ணெயில் அறுபது நாழிகை ஊறப் போட்டு எடுத்துப் புளிப் போட்டுத் தேய்ச்சுக் கழுவிக் கொண்டு எலுமிச்சம் பழச் சாற்றில் அறுபது நாழிகை ஊறப் போட்டுக் கழுவி எடுத்துக் கொண்டு இப்படிச் சுத்தி செய்த லோகம் பலம்.1, சுத்தி செய்த இரசம் பலம்.1, சுத்தி செய்த லிங்கம் பலம்.1, கெந்தி பலம்.1, இது நாலுங்கல்வத்திலிட்டு புளியந் தளிர்ச் சாறு விட்டு நாலு சாமமரைத்து அரைப்பாய் கனம் வட்டத்தில் வில்லை செய்து நன்று உலர விட்டு ஓட்டிலிட்டுச் சீலை மண் செய்து நூற்றைந்து எருவில் புடம் போடவும். இந்தப் படி பழச் சாற்றிலொரு புடம் கையாந்த கரைச் சாற்றில் ஒரு புடம், செருப்படிச் சாற்றிலொரு புடமும் போட்டு எடுத்துக் கொண்டு கல்வத்திலிட்டுப் பொடி செய்து புதுச் சட்டி காய வைத்துத் தூவிச் சற்று நேரம் மூடி வைத்து இரண்டாவதுங் காய வைத்துக் கொண்டு சாதிக்காய், சாதிப் பத்திரி, கிராம்பு, ஏலம், குங்குமப்பூ, கோரோசனை, சித்தரத்தை, தாளிச பத்திரி வகைக்குத் தட்டிடை.1 பொடி செய்து கல்வத்திலிட்டு இரண்டு தட்டிடை செந்தூர மிட்டுக் கொம்புத் தேன் விட்டரைத்து மிளகு பிரமாணம் உருண்டை செய்து வைத்துக் கொண்டு குன்மம் க்ஷயம், காச்சுவாசம், மகோதரம், பாண்டு, காமாலை, சோபை மூத்திர கிருச்சரம், நீரழிவு, வாதம் என்பது மேகம் இருபத்தொன்றும் அக்கினி மாந்தம், அன்னத் துவேஷம், அரோசிகம், முதலான சகல வியாதிகளுக்கும் சன்னி சுரங்களுக்கும் நோய் பலமறிந்து தேக பலமறிந்து ,12,24, நாள் கொடுக்கவும். பத்தியமில்லை. போ

போகமாகாது. தயிர், பால், நெய், அதிகம் சேர்த்துக் கொள்ளவும்.

சன்முக செந்தூரம்.

சன்முக செந்தூரம் இரசம், கெந்தகம், அரிதாரம், மனோசிலை, சாதிலிங்கம், துத்தம் இந்த ஆறு மருந்துஞ் சமனாய் கூட்டி கைப்பத்திரிச் சார் விட்டு அரைத்துத் திரட்டிச் சட்டியில் வைத்துச் செம்புக் கிண்ணியிலே மூடிச் சுண்ணாம்பும் உப்பும் சமன் கூட்டி அரைத்துக் கிண்ணத்தைச் சுற்றிலும் பூசி மேலே யுப்புச் சொரிந்து மேல்ச் சட்டி மூடிச் சீலை மண் செய்து முப்பத்திரண்டு நாழிகை தீபாக்கினியாக வெறித்து ஆறவிட்டெடுத்து வைத்துக் கொண்டு அரைப் பணவிடை தேனில் கொள்ளத் தீரும் வியாதி சுவாச காசம், குன்மம், பவுந்திரம், கிரந்தி சூலை, உதரம் பாண்டு, அக்கினி மந்தம் இதுகள் தீரும். இஞ்சிச் சாறும் தேனும் திப்பிலிப் பொடியும் சேர்த்துக் கொள்ளச் சிலேற்றுமம் வாய்வு அதிசாரம், ஈளை இளைப்புந் தீரும். நொச்சிக் கசாயத்திற் கொள்ள வாதம் என்பரும் திமிரமும் சோதரமுந் தீரும். அநு பான வேற்றுமை அறிந்து சுரங்களுக்குக் கொடுக்கவும்.

வாதத்துக்குக் குக்குடாதி யெண்ணெய்:-

காட்டுக் கோழியாகிலும் கருங் கோழியாகிலும் முத்தின சாவலாகிலும், பொங்கு பறித்துப் பதக்குத் தண்ணீரில் விட்டு இரண்டு படியாகல் இந்தக் கோழியைப் பிச்சுப் பிசரி அந்தக் கசாயத்தைப் பிசைந்து வடித்துக் கொள்ளவும். நல்லெண்ணை இருநாழி கசாயத்தில் விட்டு வெள்ள வெங்காயம் பலம்.1, குங்கிலியம் பலம். ½, அமுக்கிரா, சித்த ரத்தை, கடுகுரோகணி, தகரம், தேவதாரம், அதிமதுரம், மரமஞ்சள், ஓமம், வசம்பு, நற்சீரகம், கருஞ்சீரகம், திரிகடுகு, வெந்தயம், கடுகு, சித்திரமூலம், இந்துப்பு இது வெல்லாம் வகைக்கு விராகனிடை .1 கூட்டி அரைத்துக் கரைத்துக் காய்ச்சி அரக்கு பதத்தில் வடித்துக் கொள்ளவும். தினசரி நாலு காசிடைத் தயிலம் குடிக்கத் தீரும் வியாதி சுரோணித வாதம், பித்தவாதம், கப்வாதம், குடல் வாதம், முழங்கால் வாதம், குதிவாதம், அண்ட வாதம், தேவவாதம், இது வெல்லாந் தீரும். பத்தியம். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும். முருங்கையிலை, துவரைப்பருப்பு வாழைப் பிஞ்சு இதுகள் கூட்டவும். மற்றொன்று மாகாது.

சொறிக்கு மருந்து:-

அருகொடு யெருக்கு மஞ்சள் புளியிலை யவுரி யீர்க்கு
முரியிலைக் கள்ளிச் சாற்றில் முருகவே யவந்த வெண்ணெய் சி
சுரு சொறி சிரங்கு தேமல் தழுதலை மாறு மென்றே
குருமுனி யருளிச் செய்யக் குறுங்குடித் தேவன் சொன்னார்.

படர் தாமரைக்கு:-

கொன்றைத் துளிர் புளியந் துளிர் குள்விந்த மோரிந்து
பொன்றத்தலைக் கடுக்காயொரு பிடியாமல் கக்கீர்
நன்றிக் கொடு நலமிக்கொடு நாள் வேளையன் சாற்றில்
இன்றைக்கிடு நாளைக்கிலை யிலைத் தாமரை தானே.

****

முற்றும்.

****

சு.ச: 31.1.63.

107